
உலக காவிய நூல் வரிசை : 1

# கடற் கன்னி காவியம்!




கவிவேழம்

## பாரதி பாலன்

உலக காவிய நூல் வரிசை : 1

# கடற்கன்னி காவியம்



ஆசிரியர் :

கவிவேழம் பாரதிபாலன்

ஆசிரியர் :

# கவிவேழம்
# பாரதிபாலன்

DR. JEYAKUMAR KUMARASMY
GENERAL SECRETARY, GTLC
BJERGMARKEN 7, ST.TH
4300 HOLBÆK
DANMARK

## மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 4342926
தொலைநகல் : 0091-44-4346082
மின் அஞ்சல் : manimekalai@eth.net

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | ➢ | **கடற்கன்னி காவியம்** |
| ஆசிரியர் | ➢ | கவிவேழம் பாரதிபாலன் |
| மொழி | ➢ | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ | 2002 |
| பதிப்பு விவரம் | ➢ | முதல் பதிப்பு |
| தாளின் தன்மை | ➢ | 11.2 கி.கி. |
| நூலின் அளவு | ➢ | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ | 192 |
| நூலின் விலை | ➢ | **ரூ. 42.00** |
| அட்டைப்பட ஓவியம் | ➢ | திரு.மோகன் |
| லேசர் வடிவமைப்பு | ➢ | கிறிஸ்ட் டி.டி.பி. சென்டர், சென்னை - 24. |
| அச்சிட்டோர் | ➢ | ஸ்கிரிப்ட் ஆப்செட், சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ➢ | தையல் |
| வெளியிட்டோர் | ➢ | மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17. |

*சமர்ப்பணம் !*



–அன்று
மானிட உருவிலே
வந்தவர்!
மாசிலா அன்பினால்
வையத்தை வென்றவர்!
வரகவி, வள்ளல்
என்று ஆனவர்!
ஊரவர் கல்விக்கண்
திறந்தவர்! - தன்றன்
திருக்கரம் நோகவே - என்றன்
கவிதிறம் வாழ்ந்திட
இனிக்கும் யாப்பு என்ற நூல்
செய்தவர்! - என்றும்
குழந்தைகள் தோழராய்,
குதூகலம் கண்டிட - வெள்ளை
அண்ணையாய் எளிமையாய்
நின்றவர்! - பெரும்
பண்டிதர், கலாநிதி,
மொழியியல் மேதைதன்
சீடனாய் ஏற்றருள் புரிந்தவர்! - நல்லூர்
சுவாமியாய் ஆனவர்
சிவ அவதாரமாய் - யாழ்,
கொழும்புத் துறையிருந்து
அருள்பவர்! - இராமச்
சந்தரலிங் கேஸ்வரர்
திருவடித் தாமரைக்கு
ஆக்குவேன் இந்தநூல்
சமர்ப்பணம்!

உலக காவியங்கள்!

1

# கடற்கன்னி காவியம்

கவிவேழம் பாரதிபாலன்

(டென்மார்க் நாட்டின் தேசிய சின்னம் கூறும் கதை தமிழிலே காவிய வடிவம் பெறுகின்றது. மேற்படி காவியத்திற்கான டேனிஷ் கதைமூலம், புகழ்பெற்ற டென்மார்க் எழுத்தாளர் எச்.சி. அண்டர்சன் அவர்களது "ஒரு சின்னக் கடற் பெண்" என்பதாகும்.)

# ஆசியுரை

## (Madras university)

கவிவேழம் திரு. பாரதிபாலன் அவர்கள் உருவாக்கியுள்ள “கடற் கன்னி காவியம்” என்ற இந்த நூலை மகிழ்ச்சியோடு விரைந்து முழுதாகப் பார்வையிட்டேன். மிகுந்த ஆர்வத்தோடு டெனிஸ் மொழியில் உள்ள மரபுவழிச் செல்வாக்கு பெற்ற ஒரு இன்றியமையாத கதையை நன்கு மனத்தில் வாங்கிக்கொண்டு கவிஞர் தமிழில் காவியமாக வடித்திருக்கிறார்.

ஒரு மொழியில் இருந்து இன்னொரு மொழிக்கு ஒரு காவியத்தைக் கொண்டு வரும்போது, கவிஞன் பல இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். பாரதிபாலனும் அத்தகைய இடர்ப்பாடுகளை எதிர்கொண்டிருக்கிறார்.

பிரச்னைகளை எதிர்கொள்ளும்பொழுது அவற்றைச் சந்திக்கிற முறைகள் ஒருவருடைய திறமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப வேறுபடும். அப்படி வேறுபடுவது ஒட்டு மொத்தமான வளர்ச்சிக்குக்கூட ஒரு அடையாளம் என்றே கொள்ளப்படவேண்டும்.

தங்கு தடை இல்லாமல் படித்து மகிழத்தக்க வகையில் கவிவேழம் பாரதிபாலன் அவர்கள் இந்தக் காவியத்தை எழுதி இருக்கிறார்.

இன்னொரு மொழிக்கு உரிய பண்பாட்டையும், அந்த மொழிக்குரிய மக்களின் மனப்பான்மையையும், ஓரளவுக்குப் புரிந்து கொள்ள இப்படிப்பட்ட நூல்கள் உறுதியாக உதவும்.

கவிவேழம் பாரதிபாலன் அவர்கள் தமிழ் மக்களின் இலக்கிய அனுபவ எல்லையை இதன் மூலம் விரிவுபடுத்தி இருக்கிறார் என்று சொன்னால் தவறாகாது. கவி வேழம் பாரதிபாலன் அவர்கள் செம்மையான, நிறைவான நல்ல தமிழ்க் கவிதைகளை மேலும் மேலும் தொடர்ந்து வழங்கும் வகையில் தமிழ் உலகம் அவருக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கவேண்டும்.

டர்பன் — டாக்டர் **கோதண்டராமன் - பொற்கோ**

16-12-01

*துணைவேந்தர்*

*சென்னைப் பல்கலைக்கழகம்*

*தமிழ்நாடு.*

# அணிந்துரை

உலக நாடுகளை, புதியதாகத் தோன்றியவை, பழஞ்சிறப்பு வாய்ந்தவை என பாகுபடுத்திப் பார்க்கலாம். இவை இரண்டும் தங்களை உலகிலே அடையாளப் படுத்த இன்று தங்களது சிறப்புகளை கி.பி; கி.மு என்றவாறே முன் வைக்கின்றன. இவைகளுக்குள் ஒரு காலத்தில் நாடாண்ட தமிழினம் இன்று நாடற்ற நிலையிலும் கடல் கோள்களுக்கு மூத்தவர்களாய், கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிகளாய் தங்களை இனங்காட்டி பெருமை கொள்ளும்போது கிறிஸ்துவுக்கு நிகராக தமது பெருமை வாய்ந்த புனித நூலான திருக்குறள்வழியாக அதனை இயற்றியவர் காலப் பகுதியைக் கணித்து திருவள்ளுவருக்கு முன் என்றும், பின் என்றும் தங்கள் முன்னவரின் படையல்களை இனங்கண்டு பெருமை கொள்கிறது.

கடல் கோள்களால் அழிந்த முதல், இடை, கடைச் சங்கங்கள் ஆக்கிய தமிழின் இலக்கிய, இலக்கண, அறிவியல் நூல்களுடன் கிறிஸ்தவ ஆதியாகமத்திலும் ஏனைய உலக இலக்கியங்களிலும், வரலாற்றுக் குறிப்புகளிலும் தென்படும் தமிழர் பற்றிய விபரங்களைத் தேர்ந்து அனைவருக்கும் முன்பாக பண்பாடு, நாகரிகம் படைத்தவர்களாக தம்மை நிறுத்தி மகிழ்ந்து வருகிறது. இது அன்று தொடக்கம் நடந்து வருகிறது.

தமிழர் போற்றும் மகாகவி பாரதியார் அன்று தமிழர்களைக் கண்டிக்கும்போது, "மறைவாக நமக்குள்ளே

பழங்கதைகள் பேசுவதிலோர் மகிமை இல்லை, திறமான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்யவேண்டும்" என்று சாடிப் பாடி இருக்கிறார்.

தமிழரின் முன்னைப் பழஞ்சிறப்புக்கள் என்று கூறும்பொழுது உளவியல் ரீதியாக ஒவ்வொரு தமிழனும் தான் ஒரு அறிவு ஜீவி பரம்பரையில் உற்பவித்தவன் என்பதான எண்ணம் மீதூரப் பெறுகிறான் என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். அந்த நம்பிக்கை அவனை வழி நடத்தி வரும்போது அவனும் ஒரு அறிவுஜீவி ஆகலாம். அது ஒட்டு மொத்தமான முழுத் தமிழினத்தின் விதியைத் தீர்மானித்துவிடாது. அதனால் படித்தவனும், முன்னைய அறிவியலைக் கூறிப் பெருமை அடைபவனும் என்று அது தமிழரை இரு கூறு மாந்தராகப் பிரித்துவிடும். அந்த இரு கூறுகளும் மேலும் விரிந்து செல்லும்போது தமிழரின் ஒட்டுமொத்தமான செயல்பாட்டு வடிவம் உலகத்திலே முழுமை அற்றுப்போகும் ஒரு துர்ப்பாக்கியமே தொக்கி நிற்கும். இவ்வாறான ஒரு வேளையில் எமது தமிழினம் தமது பண்டைக்காலத்துக் கல்வித் திட்டத்திற்கான மொழிநடையை திரும்பிப் பார்க்கவேண்டிய சூழ்நிலை உள்ளது.

பழங்காலத் தமிழர்களின் எல்லாத் துறைக் கல்வியுமே செய்யுள் வடிவத்தில்தான். அவை இலக்கியம், இலக்கணம், மருத்துவம், கணிதம், வானியல் என்றே விரிந்து செல்லும்.

இலக்கியம் தவிர்ந்த இன்றைய ஏனைய துறைகள் எல்லாமே உரைநடை அல்லது வசன நடைப்பாற்பட்டன. இந்த வசன நடை தமிழரிடம் கி.பி. 15-ம் நூற்றாண்டிற்குப்

பிறகே நுழைந்து கொண்டது. ஐரோப்பியர்களே இந்த வசன நடையை எங்களுக்கும் புகுத்தி இருக்கிறார்கள்.

கி.பி. 15-ம் நூற்றாண்டளவிலான வாஸ்கொடகாமாவின் கடல்வழிப் பாதை கண்டுபிடிக்கப் பட்டதற்குப் பின்பு வணிக நோக்காகவும், தமது கிறிஸ்தவ மதம் பரப்ப என்றும் வந்த இந்த ஐரோப்பியர் எமது தமிழின் இலக்கண, இலக்கியங்களை கற்றுத் தேறியபின் எமது நன்மைக்காக ஆக்கி வைத்த காரியங்கள் கணக்கில் அடங்கா.

முதல் முதல் ஆசிய நாடுகளுக்குள் அச்சுக்கலையை எங்கள் அருந்தமிழிலேயே உருவாக்கி வைத்தவர்கள் இந்த ஐரோப்பியரே! கென்றிக்ஸ் என்னும் மதபோதகரே 1557ஆம் ஆண்டு எங்கள் தமிழை முதன் முதலாக அச்சு வாகனம் ஏற்றி சிறப்பித்திருக்கிறார். தமிழரின், அச்சிலே வந்த முதல் தமிழ் நூலின் பெயர் தம்பிரான் வணக்கம் என்று சொல்லப்படுகிறது.

கென்றிக்ஸ் மிகவும் பின் அடைந்த தமிழருக்காக தமிழிலே இலக்கண பாடங்களை எளியதாக்கி பள்ளிக்கூடமும் திறந்து, பின் தங்கிய தமிழ்நாட்டை முன்னிலைப் படுத்த அயராது பாடுபட்டு இருக்கிறார். இத்தாலி நாட்டில் இருந்து வந்த கொன்ஸ்டன்டைன் பெஸ்கி பாதிரியார் (1680-1757) தமிழிலே பாண்டித்தியம் பெற்று தமிழராக மாறினார். தனது பெயரை வீரமா முனிவர் என்று தமிழிற்கு மாற்றினார். தமிழின் பழைய எழுத்துக்களைச் செம்மைப்படுத்தி சதுர் அகராதியும் செய்து கிறித்தவ இலக்கியங்களும் ஈந்தார்.

இவ்வாறாக எங்கள் மொழி வழக்கை தமது மேற்குலக ஓட்டத்திற்கு ஏற்றாற்போலவும் மாற்றி

அமைத்தவர்கள் இவர்களே! இவர்களுக்குப் பின்னால் வந்த பாதிரிகளுக்குப் பெரிய சிக்கல் இருக்கவில்லை. அவர்கள் தமிழரின் பண்பாட்டை பாரம்பரியங்களை அறிந்து தேர்ந்து பின்னடைவு எய்தி இருந்த தமிழரின் கல்வி முறைக்காக அயராது உழைத்தார்கள். தமிழரிடம் ஏற்கனவே இல்லாத அகரமுறைக் கல்வி இவர்கள் காலத்தில்தான் புகுத்தப் பெற்றது. அப்படிப் புகுத்தும்போது அவர்கள் தமிழரது பாரம்பரியங்களை உணர்ந்தே புகுத்தினார்கள்.

தமிழரது பாரம்பரியம் தாய்வழி என்னும் உளவியலை உணர்ந்த இவர்கள் · தமிழரது ஔவைப் பாட்டியை இனங்கண்டு தேர்ந்தார்கள்.

சிறுசிறு வசன நடைகளை, பாடல்களை தமிழர் பழகுவதற்கு எளியதாக ஔவையார் நூல்களாகவும் ஆக்கித் தந்தார்கள். அவர்கள் எழுதிய அந்தத் தமிழ் அகர வரிசைக் கல்வித் திட்டத்தை தமது மேற்குலக மதக் கூண்டுக்குள் மட்டும் என்னாது நல்வழி போதிக்கும் தமிழரது பண்பாட்டு வழிகளிலே கொண்டு சென்று போதித்தார்கள். அத்துடன் தமது அன்றைய விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளையும், ஒழுக்க நெறி புகட்டும் ஔவைப் பாடல்களுக்குள் புகுத்தினார்கள்...

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர், நாழி முகவாது, நால் நாழி - என்பது ஔவையின் வாக்குண்டாமில் வருகிறது. இது கி.பி. 17-ம் நூற்றாண்டில் நீரின் இயல்பு பற்றிய மேற்குலகின் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு ஆகும். அன்று தங்கள் மதத்தைப் போதிக்க வந்த மேற்குலகம் எங்கள் தமிழைச் சீர்திருத்தி ஏற்றத்தாழ்வு பாராது எல்லாத் தமிழர்களையும் கல்விமான்கள் ஆக்க முயற்சி செய்து இருக்கிறார்கள்.

பிரித்தானியர் கொலனியான இலங்கையில் ஆறுமுக நாவலர் அவர்கள் சிறந்த கல்விமான் ஆகிக்கொண்டார். அவர், மேற்குலக, கிறிஸ்தவ கல்வி முறையூடாக தம்மையும் உருவாக்கியவர். ஆறுமுக நாவலரிடம் விவிலிய வேதத்தை மொழிபெயர்த்து வழங்கும்படி கிறிஸ்தவ பாதிரியார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நாவலரும் தமிழிலே மொழிபெயர்த்து கொடுத்தார். பைபிள் வசன நடையினூடாக தம்மை வசன நடை கைவந்த வல்லாளர் ஆக்கினார். தமிழிலே அந்த வசன நடையையும், அவர்கள் அறிமுகமாக்கிய அச்சுக் கலையையும் வைத்துக்கொண்டே சைவத் தமிழருக்கு ஒரு பாதுகாப்புக் கவசமாகி ஐரோப்பிய கிறிஸ்தவத்தையும் எதிர்த்தார் என்பதே கசப்பான உண்மை.

தமிழ் வளர்த்த சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் கிறித்துவப் பெயருடன், கிறித்தவராகியே கல்வி கற்று, மிக உயர்ந்த பதவிகளில் அமர்ந்தவர். உரிய ஒரு நேரத்தில் மீளவும் சைவராகி தாமோதரனாகி தமிழ் வளர்த்தார் என்பது தமிழர் அனைவரும் அறிந்த உண்மைகள். அந்நியர்கள் என்றுமே அந்நியர்களாக இருக்கமுடியாது. அவர்கள் தமிழருக்காகச் செய்த தியாகங்களையும் எண்ணிப் பார்க்கத்தான் வேண்டும்.

இன்றளவும் உலகம் தழுவியதான எமது கல்விக் கொள்கைகள் அனைத்துமே இந்த மேற்குலக நடைமுறைக்கு ஒப்பவே சென்று கொண்டு இருக்கிறது. எங்களிடம் எத்தனைதான் பாரம்பரியங்கள் இருந்தாலும் இன்றைய நடைமுறை உலகிற்கு ஏற்றாற்போல அதனைப் போதித்த குருவானவர்கள் இந்த மேற்குலகில் இருந்தே வந்தவர்கள் என்றே கொள்ளவேண்டியிருக்கிறது. ஐரோப்பியர் வருவதற்கு முதலே எங்களை வேறொரு நெறிக்குள் அல்லது

நெறிகளுக்குள் புகுத்த நினைத்தவர்கள் மேற்குலக நிலையையும் உள்வாங்கி எமக்காக வேறொரு விளக்கம் தருபவர்களாகவே இன்றும் இருக்கிறார்கள் என்பதை இளைய உலகம் உள்வாங்கிக் கொண்டும் இருக்கிறது. இத்தகையவர்களின் அன்புப் பிடிகளுக்குள் இருந்து தமது கல்விக் கொள்கைகளில் திருப்தி பெறாதவர்கள் ஆகும் நிலையை உருவாக்கி வளர்த்தல்போல ஒரு தண்டனை உலகில் வேறொன்றும் இல்லை.

இவ்வாறான ஒரு நேரத்தில் பாரதிபாலன் அவர்கள் உலக காவியங்கள் வரிசையில் முதலாவதாக கடற்கன்னி காவியத்தை தந்து நிற்கிறார். தமிழரிடம் மச்சகன்னி, நாககன்னி போன்ற அறிவும் உண்டு என்று இதனை ஒதுக்கிவிட முடியாது.

எங்களது கல்வி அறிவை நடைமுறை உலகிற்கு ஏற்றாற்போல மாற்றி அமைத்துச் சென்றவர்கள் வாழும் மேலைத் தேசத்தில் இருந்துகொண்டு தம்மாலான தமிழ்த்தொண்டு செய்து வரும் பாரதிபாலன் சிறிது காலம் எனது மாணவனாக இருந்தவர். அவரது கவிதைகளில், கதைகளில், ஆய்வுகளில் நானே மெச்சும் விடயங்கள் ஏராளம்.

அவர், தான் வாழும் நாட்டின் தேசிய சின்னமான கடற்கன்னியைக் காவியமாக எழுதி இருக்கிறார். டேனிசு மொழிக்கு உரியதைத் தமிழ்ப் படுத்தி இருக்கிறார். பிறிதொரு மொழிக்கதை வடிவை தமிழில் காவியம் ஆக்கும் முயற்சி. எல்லாமே சந்தக் கவிதைகள். வாய்விட்டுப் பாட சுகம் தருகின்றன... இன்னொரு மொழியில் இருந்து மொழி பெயர்த்தது என்று கூறமுடியாதபடி மிகவும் அழகாக

கவிதை வடித்துள்ளார். யாழ்நூல் செய்த சுவாமி விபுலானந்த அடிகளின் மொழி பெயர்ப்புக் கவிதைகள் தரும் சுகம் போல இவரது கவிதைகளும் அருமை.

தொடர்ந்து உலகளாவிய வரிசையில் ஏனைய மேலை நாடுகளின் அடையாளங்களைக் கூறும் கதைகளையும் தமிழ்க் காவியமாக்க முனைந்துள்ளார். எதிர்காலத்தில் தமிழர் தலைநிமிர்ந்து வாழ பாரதிபாலன் மேற்கொள்ளும் பணிகள் பெருமை படத்தக்கவை. தமிழ்கூறு நல்லுலகம் அவரது பணிகளை வரவேற்க வேண்டும் என்றே வாழ்த்துகிறேன்.

25.02.2002 டாக்டர் ச. முத்துலிங்கம் (ஞானதீபம்)

ரொறன்ரோ *முன்னாள் கல்வி உளவியல் துறை பேராசிரியர்*

கனடா *கொழும்பு பல்கலைக் கழகம்,*

*இலங்கை.*

# சிறப்புரை

**(University of Jaffna)**

ஈழத்துத் தமிழ்ப் புலமைப் பரப்பு இன்று உலகளாவிய ரீதியில் பரந்து விரிந்து சென்றுள்ளமையைக் காண முடிகின்றது.

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல்வேண்டும்” என்ற பாரதியின் கனவு இன்று நனவாகியதை நிதர்சனமாகக் காண்கின்றோம்.

ஈழத்துக் கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள் பலர் புலம் பெயர்ந்து சென்ற வழிகளிலும் எமது இலக்கியத்திற்கு நன்மை பயத்துள்ளது என்றே கருத வேண்டும்.

புதிய சூழல், புதிய அனுபவம், புதிய வாழ்வு, புதிய பிரச்சினைகள் இவற்றையெல்லாம் பாடுபொருளாகக் கொண்டு இலக்கியம் படைக்கும் பாங்கு மிக அண்மைக் காலத்தில் அதிகரித்து வந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. தமிழ் இலக்கிய ஆய்வுப் பரப்பிலே புலம் பெயர் இலக்கியம் என்ற ஒரு வகைப்பாடு இன்று புதுவதாகப் பிரவேசித்துள்ளது.

ஈழத் தமிழர்களின் அவல வாழ்வை, அவர்களின் முரண்பாடுகளைக் குறைபாடுகளைத் தம் சொந்த மண்ணில் அவர்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்போது மனதிலே ஏற்படும் ஒருவகையான ஆறுதலையே அவாவியவையாக மாத்திரமன்றி எமது சமூகத்தின் நிழற்படமாகவும், ஊடுருவு கதிர்ப்படமாகவும் (எக்ஸ் ரே) இருப்பதை இனங்காண முடிகின்றது.

டென்மார்க்கில் இருந்து இலக்கிய முயற்சிகளில் ஈடுபடும் பாரதிபாலனைப் பாராட்டுகின்றோம்.

பாரதிபாலனைப் பாலனாக இருக்கும் காலத்திலேயே நான் நன்கு அறிவேன். சிறுவனாக, துடிப்பு மிக்க இளைஞனாக இருந்தபோதே இலக்கியத்துடன் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கவிதை அவருக்கு ஈடுபாடான துறையாக இருந்தது.

புலம்பெயர்ந்து வாழும் சூழலிலும் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இலக்கியத் தாகத்துடன் அவர் செயற்படுவது மகிழ்ச்சி தருகின்றது.

படைப்புப் பல படைத்துப் பாரதிபாலன் கலை இலக்கிய உலகில் தனக்கெனத் தனியானதோர் முத்திரையைப் பதிக்கவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி எஸ். சிவலிங்கராஜா**
தலைவர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

28.02.2002

# வாழ்த்து மடல்...

அன்புநிறை பாரதிபாலனுக்கு,

தங்களோடு எனக்கு இரண்டு தொடர்புகள். இரண்டுமே இனிமை சுரப்பவை. அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஐபீசியில் ஏற்பட்ட தொடர்பு ஒன்று. புலம்பெயர்ந்த தமிழ் மக்களின், அறிவு, கல்வி, இலக்கியம், சமயம், செய்தி என்ற வெவ்வேறு துறைகளில் அவர்களுக்குக் குறை நிரப்பியாகவும், அலைவிலே சிக்கி அகதிக்கோலம் பூண்ட எம் மக்களுக்குப் புலத்தையும் மண்ணையும் ஒன்றிணைக்கும் தொப்புள் கொடியுறவுப் பாலமாகவும், ஐபீசி வானொலியை நாம் தொடக்கி நடத்தியபோது அதிலே தாங்கள் தங்களையும் இணைத்து, அவ்வப்போது வானலையில் வந்து கவிதை, கலை, இலக்கிய வடிவங்களில் சமூகப் பணிச் சாமரை வீசி மக்களை வளப்படுத்தியவர்கள். தங்கள் அரிய பங்களிப்பை அப்போதெல்லாம் நெகிழ்வோடு நினைவு கூருவோம். ஐபீசியை விட்டு யான் வெளியேறிய பின்னரும், அந்தப் பசுமைப் புல் தரையில் அன்று மேய்ந்ததை, இன்று என் மூப்புப் பருவத்தில், ஒரு புறத்தே அமர்ந்து இரைமீட்கும் வேளையில் தங்கள் பணியும் நினைவில் வந்து இனிமைக் கசிவை ஏற்படுத்தும். இது எம்மிடையே ஏற்பட்டு நினைவில் நிற்கும் முதல் தொடர்பு. அத்தகைய இரண்டாவது தொடர்பு இரண்டு மாதங்கள் முன்னதாகத் தாங்கள் லண்டனில் என் அகதிக் கூண்டில் என்னைச் சந்திக்க வந்தபோது ஏற்பட்டது. மூன்று மணிநேரச் சந்திப்பு என்றாலும் இருவருமே தவிப்போடு எவ்வளவு இலக்கியப் பரப்பைக்கூடி அளக்க முடிந்தது என்பதை நினைக்கும்போது இன்றும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

தங்கள் பையிலே, தாங்கள் எழுதி முடித்திருக்கும் கடற் கன்னிக் காவியம் எழுத்துருவில் இருந்தது. எனக்கும் படித்துக் காட்டுங்கள் என்றேன். படித்தீர்கள். கேட்டுக் கொண்டிருந்தேன்.

அந்தவேளை, என் நினைவு பின் நோக்கி ஓடியது. கொழும்பு கல்வி அமைச்சில் நான், அரச கரும மொழித் திணைக் களத்தில் மகாகவி. ஐந்து நிமிட நடை தூரத்தில் எம் பணி மனைகள். புதிய கவிதை ஒன்றை எழுதியதும் மகாகவி அதை நேரே கொண்டு வருவார். அல்லது தொலைபேசியில் படிக்க முற்படுவார். "நிறுத்துங்கள் நேரே வருகிறேன்" என்று விட்டு அங்கே போவேன். "படியுங்கள்" என்பேன். "எழுதுவது என்வேலை; படிப்பது உங்கள் வேலை" என்பார். "படைத்த பிரம்மாவின் நாவே உயிர் ஊத நான் அதைக் கேட்கிறேன்" என்பேன். படிப்பார். எதிரே அமர்ந்து அவருடைய மனவோட்டங்களையும் அளவிடுவேன். மகிழ்வேன். இப்படித்தான் முருகையன், சிவானந்தன், மௌனகுரு, சில்லையூர் செல்வராசன், இளைய பத்மநாதன் இவர்களிடமும். அந்தப் பிரமாக்கள், தங்கள் குரலில், எனக்கு மட்டும் படிக்க, அந்தக் கணங்களை என் நெஞ்சில் பதிய வைத்த அந்த நாட்களை நினைவு கூர்ந்தேன்.

கடற்கன்னியை என்முன் தாங்கள் படித்துக் கொண்டிருக்கும்போது, தங்களையும், அவர்களோடு வரிசையிட்டு இதயத்தில் அமர்த்திக் கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டேன்.

டென்மார்க் நாட்டு தேசிய எழுத்தாளன் அண்டர்சன் வடித்த ஒன்றைத் தாங்கள் எம் மண்ணின் நினைவோடு, ஏக்கத்தோடு எழுதியிருப்பதைக் குரலிலும், எழுத்திலும் கண்டேன்.

எனக்கும் என் பாட்டி, என்பால காலத்தில் உப கதை கூறிய பாங்கில், தங்கள் வடிவாக்கம் ஒரு கணம் உறைக்க வைத்தது. மீன்பாடும் மட்டக்களப்பும், மீன் உறுமும் திருகோணமலையும், எழுவை தீவும், தாழ்வு பாடும், இப்படி எம்மண்ணில் மீன்குரல் கேட்கும் நினைவோடோ என்னவோ, நீங்கள் எம் மண்ணில் முன்னாளில் நிலவிய பல கிராமியக் கதைகளைத் தொட்டுச் சென்றீர்கள்.

கடற்கன்னியின் வாலில் தாங்கள் ஒவ்வொன்றாய்ச் சிப்பி செருக, என் கண்ணில், என் ஊர்க் குழந்தை ஒன்றுக்கு வளை காப்பு நடத்திக்கொண்டு இருந்தேன். சிப்பியைப் புதிதாகச் செருகும்போது குட்டிக் கடற்கன்னி வலிகொள்ள, காது குத்தும் என் ஊர்க் குழந்தையின் வீறிட்ட அலறல் என் காதில் தெறித்தது. கடற்கன்னி அக்காமார் ஐந்துபேரும் உலகெல்லாம் உலா வந்தாலும், ஊருக்குத் திரும்பி வரும்போது தமக்குக் கிடைக்கும், இன்பம் பற்றிக் கூறும்போது, பாரதிபாலன், இன்றைய அலைவிலே சிக்கி உலகெலாம் வலம் வந்தாலும், மண்ணுக்குத் திரும்பவேண்டும் என்ற தங்கள் தாகத்தை, நெஞ்சுள் ஏதோ உருள, நானும் கண்டேன்.

வெளியே வந்த பின்னும், தன் சிந்தனையை மண்ணோடு இணைத்து இலக்கியமாகப் படைக்கும் தாங்கள் ஒரு தாய்மை வரம் பெற்ற கலைஞன்! இத்தகையவன் ஆண்டொரு சூல் கொண்டு, பயன் தரும் இலக்கிய மகவுகளைப் பெற்று என் மொழிக்கும், என் மண்ணுக்கும் அழகு சேர்க்கவேண்டும். நெஞ்சார வாழ்த்துகிறேன்.

பிப்ரவரி, 2002 — ***ஏ.சி. தாசீசியஸ்***

இலண்டன் — (ஈழக் கூத்தன்)

# வாழ்த்துரை

22.10.2001

நண்பர் பாரதிபாலன் அவர்களுக்கு...

பிறந்த மண்ணைத் துறந்து, எத்தனையோ இன்னல்களுக்கிடையில் எங்கோ வாழ்ந்து கொண்டிருந்தாலும், எங்கள் பிரத்தியேக அடையாளங்களைப் பிடிவாதமாக நிலை நிறுத்தியபடி, கலை இலக்கியப் பணிகளில் ஈடுபட்டுவரும் தங்களைப் போன்ற இளைஞர்கள் என் நெஞ்சுக்கு மிகவும் நெருக்கமானவர்கள்.

வெளிமண்ணில் பிறக்கும் எங்கள் தமிழ்க் குழந்தைகள் தங்களுக்கான பாரம்பரியத்தை உங்களைப் போன்றவர்களிடமிருந்துதான் பெற்றுக் கொள்ளவேண்டும்.

சென்னை - 93

வாழ்த்துக்களுடன்
**பாலுமகேந்திரா**

# வாழ்த்துரை

நாங்கள் புலம் பெயர்ந்த நாடான டென்மார்க், உலகிலே முதல் தரமானது. வளங்கள் நிறைந்தது. இந்த நாட்டின் பழைய வரலாற்றைச் சிறப்பித்துக் கூறமுடியாது. இவர்கள் மூடவழிபாடுகள் கொண்டிருந்திருக்கிறார்கள். கடற் கொள்ளைக்காரர்களும் கூட என்கிறது வரலாறு.

இன்று அந்தச் சுவடுகளை அவர்களிலே கண்டு கொள்ள முடியாது.

சட்டங்களை மதிப்பவர்கள்.. நேர்மையானவர்கள்.

பண்பானவர்கள். இவர்களிடம் தோன்றிய அறிஞர்கள் காட்டிய வழிகளைப் பின்பற்றி நன்கு முன்னேறிவிட்டார்கள். இந்த நாட்டின் தேசிய சின்னமே கடற்கன்னி. துக்ககரமான கதை. மிகவும் சிக்கலான கதையைப் பைந்தமிழ்ப் பாவலர் பாரதிபாலன் அவர்கள் மிகவும் எளிமைப்படுத்தி சந்தக் கவிதைகளாக சிறுவரும் படித்து மகிழத்தக்க வகையிலே செய்துள்ளார். கவிவேழம் அவர்கள் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற சிறந்த கவிஞர். இந்தப் புலம் பெயர் உலகிலே பல கவிஞர்களையும் உருவாக்கி இருக்கின்றார்.

இவர் சிறந்த சிறுகதை எழுத்தாளரும், ஆய்வறிஞருமாவார். யாரையும் புண்படுத்தாது ஊக்குவிக்கும் நல்ல உள்ளம் படைத்தவர்.

இந்தப் புலம்பெயர்ந்த உலகிலே மெய்யான தமிழ்த் தொண்டர்கள் என்று விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரில் எங்கள் கவிவேழமே முன்னணி வகிக்கிறார். இவர் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் என்ற சர்வதேச அமைப்பின் உதவித் தலைவர்களில் ஒருவராகவும், எமது இஸ்கன்டிநேவியன் நாடுகளின் அமைப்பாளராகவும் பணி ஆற்றி வருகிறார்.

அவரது நற்பணி தொடர எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

19.02.2002

தமிழ்த்திரு ***இ. இராஜேந்திரம்***
செயலதிபர், உ.த.ப. இயக்கம்
டென்மார்க்.

# வாழ்த்துரை

கவிவேழம் பாரதிபாலன் அண்ணாவுக்கு,

தாங்கள் உலக காவியம் என்ற நூல் வெளியிடுவது கேட்டு மிகுந்த மகிழ்ச்சி.

தமிழ் ஆசிரியையான நான் எனது 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு தாயக இலக்கியமாக தங்கள் கவிதைத் தொகுதியில் இருந்து தெரிவு செய்தே படிப்பித்து வருகிறேன். எனது மாணவர்கள் தங்கள் கவிதைகளில் சிறந்த ஆர்வம் காட்டுவதை உணர முடிகிறது.

தாங்கள் தங்கள் பண்டிதத் தமிழில் இருந்து கீழே இறங்கி வந்து எமது மாணவர்களுக்காக எழுதும் இலக்கியங்கள் சாகா வரம் பெற்று வாழும் என்றே வாழ்த்துகின்றேன்.

16.03.2002
ரொரன்றோ
கனடா

திருமதி. *உ. கலாநிதி* B.A. (Hon.)
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

# நிச்சயம் சிரஞ்சீவித்துவம் பெறும்!

மரங்களுக்கு வேர் இருக்கிற மாதிரி மனிதர்களுக்கும் வேர்கள் உண்டு. அது அவரவர் இனம், மொழி, பண்பாடுகள், பாரம்பரியம், கலை, கலாச்சாரம் எனக் கொள்ளலாம். நாகரிக விஞ்ஞான வளர்ச்சிப் போக்கில் கால தேச வர்த்தமான தேவை கருதி இயற்கையான பரிணாம வளர்ச்சி காண மனிதன் மென்மேலும், சிறப்பு, செம்மை நோக்கி பயணிப்பது தவிர்க்கமுடியாத தேவையே. இதில் மறுப்பில்லை.

ஆயினும் வளர்ச்சி என்பது வேர்களை அடியோடு அறுத்துக்கொள்வது அல்ல என்று பகுத்தறிவோடு உணரப்படவேண்டிய உண்மை என்று நினைக்கிறேன். இந்த வகையில் இளம் கவிஞர் - எழுத்தாளர் பாரதிபாலனாம் கே. ஜெயக்குமார் அவர்களின் உலக காவியங்கள் பாகம் (1) தமிழியல் வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பாக அமையும் என்பது எனது திடமான நம்பிக்கை.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்க்கவேண்டும் என்று மகாகவி பாரதி சொன்னதன் தாற்பரியம், தமிழில் புதிய நவீன ஆக்கங்கள் போல, உலக மட்டத்திலான உன்னத இலக்கியங்களும் தமிழில் பரிவர்த்தனை செய்யப்படுதல், தமிழ் மொழிக்கு ஊட்டமும் உரமும் சேர்க்கும் என்பதே. இந்த வகையில் பாரதிபாலன் உலக நாடுகள் பலவற்றின் உன்னதம் பெற்ற இலக்கிய படைப்புக்களை முத்திரைச் சித்திரங்களை தேடிப்பிடித்து தமிழுக்கு கொணரும் முயற்சியின் முதல்ப்படிதான் இந்த கடற்கன்னி காவியம். டென்மார்க் நாட்டின் பிரபல இலக்கிய படைப்பான எச்.சி.

அண்டர்சனின் கடற்கன்னி கதையை காவிய நடையில் பாரதிபாலன் தமிழ்ப்படுத்திய பாங்கினை, தொலைபேசியூடாக அவர் ஒரு சில வரிகளை எனக்குச் சொன்னபோது, என் மனதில் பதிந்த தெளிவான பிம்பங்கள், அவரது காவிய நடையின் கவித்துவ செழுமையை அப்பட்டமாக உணர்த்தின என்பது, நிச்சயம் மிகையான கூற்றல்ல. குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டுவதுபோல குறுகிய வட்டத்துள் சுழல்வது வளர்ச்சியல்ல என்பதை ஆழ்ந்த இனத்துவ இலக்கிய ஆர்வமும், அதிலும் சிறப்பாக அடிப்படை மானிட நேயமும், ஆக்கபூர்வமான அறிவியல் தேடலும், ஆத்மார்த்தமான மனுசத்தனமும் மிக்க பாரதிபாலன் உலக காவியங்களைத் தேடி, சிறந்தவற்றை இனங்கண்டு, இதயத்தைத் தொடும் இனிய காவியத் தமிழில் செதுக்கும் முயற்சி, சர்வதேசிய கணிப்பும் கௌரவமும் கண்டிப்பாகப் பெறும் என்பதில் ஐயமில்லை.

பள்ளிப் பருவத்தில், பதினாறு வயது தொடக்கம் கவி கிறுக்கப் பழகி, இன்று புலம்பெயர்ந்த இந்த நாட்டில் மட்டுமின்றி, அகில உலக மட்டத்திலும் அகலக் கால் பதித்து, எழுச்சி ஊட்டும் புத்திலக்கியப் பாதையில் நவீன கருத்தியல்களை பகுத்தறிவோடு உள்வாங்கி, தமிழ் மொழிக்கு புத்துரம் இடும் பணியில் ஈடுபட்டுள்ள என் அருமைச் சகோதரன் பாரதிபாலனின், நெஞ்சுக்கும், சிந்தனைக்கும், எழுதும் கரங்களுக்கும், இமாலய சக்தியும் செழுமையும் கிட்ட மனதார வாழ்த்துகிறேன். பாரதிபாலா! நும்பணி காலத்தால், அகில சிரஞ்சீவித்துவம் பெறுவதாக!

நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்!

16, பிப்ரவரி 2002. தமிழ்மணி **யோகா பாலச்சந்திரன்**

மொன்டிரியல்

கனடா

## Jayakumar Kumarasamy

*Fra : Bjøm Jessen <nbj@grin.dk>*
*Til : Jeyakumar Kumarasamy <bharathi@mail.dk>*
*Send : 27, februar 2002 12:46*
*Emne : Havfruen, 2*

*Kumarasamy Jeyakumar er tamilsk flygtning tilkendt asyl i Danmark, hvor han bor med sine kone og tre børn.*

*Han er vicepreident i organisationen International Tamilsk Kulturbevægelse i Skandinavien, hvor bevægelsens formål er at opnå integration af tamilsk kultur og formål ved udveksling af kunst, overbevisninger og økonomi, alt på venskabelig og uvoldelig måde.*

*Frem for alt er han en velkendt poet, som skriver under forfatternavnet Bharathibalan, og han er velbevandret i den indiske Veda-litteratur, derunder heltedigtet Mahabharata og den højtelskede Bhagavad Gita.*

*Med kultural integration som mål har Bharathibalan besluttet at trække paraleller mellem de gamle indiske heltedigte og de europæiske myter ved at inkludere sadanne myter i sine egne poetiske udtryk i epos-form. Det er hans tanke at udgive et årligt epos i forbindelse med østens Nytår i april.*

*Det første er baseret på det danske eventyr "Den lille Havfrue" af H.C. Andersen. Historien handler om havfruen, som forelsker sig i en menneske-prins.*

*For at bytte sin fiskehale ud med menneske ben og forlade sit undersøiske rige, må hun betale en høj pris.*

*Dette sammenligner Bharathibalan med det tamilske ordsprog: "En mand uden tøj er kun halv mand".... eller omskrevet til "En mand uden fædreland er kun halv mand". Disse "halve mænd" er imidlertid gudfrygtige uanset farve, trosretning, race eller kaste.....*

*Bharathibalan bringer altså det så velkendte budaskab, som jo ikke kan gentages for ofte. Hans sag er velment og relevant, jeg giver ham hermed min fulde støtte og velsignelse.*

***Bjørn Jensen.***

# SENGUNTHA HINDU COLLEGE STUDENTS ASSOCIATION

*UK branch*

6 Tideswell Green
Newhall
Swadlincote
Deybyshire DE11 0UX

As an ex Senguntha Hindu College student myself, I am privileged to say this is a great achievement with the new publication of 'Ulaka Kaaviamcal' Part 1 by the great author, ex-Senguntha Hindu College student, writer, and a scholer Pandit K. Jeyakumar who is popularly known to Tamils all over the world today as 'Kavivezham Bharathibalan'. This unique piece of work not only opened every pages and chapters of our religion, history and literature, but also reached new heights in modern literature drawing parallels, similarity, clarity and understanding with western cultures and values today. It is worth mentioning that, UK Senguntha Hindu College Students Association decorated the author with a honourable title 'Panmuga Bharathi' in London for his recent book 'Arai Manitharkal'

We wish him good luck and great success with his unique piece of Tamil Literature and his thoughts should continue with many more Tamil volumes like this.

**Rasty Ganendran** B.Sc., M.Sc. (London)
*Director of Firetherm International Group*
*Int. Senguntha Hindu College Students Association, UK Branch*
*03 March 2002.*

# என்னுரை

இந்த உலகிலே காணும் மனித வாழ்வு எதிலுமே அரையுங் குறையுந்தான். தேடல்... தேடல்... என எங்குமே நிறைவற்ற தேக்கநிலை!

நாகரிகத்தை அனைவருக்குமாகக் கற்றுத் தந்துகொண்டு இருக்கும் மேற்குலக சமூகமோ தனது உச்ச நிலையிலே திருப்தி பெறாத வண்ணம் மேலும், மேலும் தேடிக்கொண்டே திருப்தி அற்று அலைகின்றது.

அந்தக் கற்கை நெறியைக் கடைப்பிடித்து ஒழுகும் ஏனைய உலகோ மேலும் புதிய மாற்றம் வேண்டி ஏங்கிக் கிடப்பதும், இனி என்ன புதிய பிரச்னைகள் முளைத்தெழுந்து தம்மை குழப்பத்தில் ஆழ்த்திவிடுமோ என்பதுமாகப் பங்கு போட்டு அந்த வெற்று இடத்தை பிறவழித் தேடல்களில் புகுத்தி தன்னை வருத்துவதுடன் தமது சமுதாயத்தையும் குழப்பி வருவதும் ஒரு தொடர்கதையாக...

இதற்குள்ளே காத்திரமான படைப்புக்களுடன் களனற்று அலைந்து கொண்டிருக்கும் முன் தோன்றிய மூத்த தமிழ்குடிகளாக நாமும் வெந்து கொண்டிருக்கின்றோம். பாரம்பரியச் சிறப்பு வாய்ந்த தமிழர்களான நாங்களும் எங்களை உலகிலே சீராக நிலை நிறுத்தும் பணியாக - எம்மை இந்த நடைமுறை உலகிலே தக்க வைப்பதற்கு இந்த மேற்குலகத்திடம் இருந்து கற்க வேண்டிய புதிய பாடம் என்ன? என்பதே எனது தேடலாக இங்கே...

எமது இலக்கிய, இதிகாச புராணங்கள் வழி தேவர்களின் இந்திரலோக வர்ணனைகளை மேற்குலகின் வாழ்வியத்துடன்

பொருத்திப் பார்க்கின்றேன். பிரளயங்களுக்கு முன்பு எமது தமிழர் கண்ட தன்னிறைவான நாடுகளே அவ்வாறு எம்மவர்களுக்கு கற்பனைக் கனவுகளை எழுப்பி இருக்குமா? என்பதை பின்னடைவு உற்றிருக்கும் எமது இன்றைய நிலைப் பாட்டோடு கொண்டுவந்து பொருத்துகின்றேன்.

வளர்ச்சி பெற்ற இன்றைய மேற்குலகு புதிய மிலேனியத்திலும் மேலும் ஜனநாயக, சமூக, பொருளாதாரத்தின் எதிர்காலத் திட்டம் நோக்கி எழுந்திருக்கும்போது இவர்கள் வளர்ச்சிகள் போல எமது நாடுகளும் எப்பொழுது முன்னேறும்? என்பதே இங்கே எனது ஏக்கப் பெருமூச்சாகிறது. எனது கண்கள் இந்த மேற்குலக நாடுகள் ஒவ்வொன்றும் தமது நாடுகளை அடையாளப் படுத்த ஆக்கி வைத்திருக்கும் கொடிகள், தேசிய சின்னங்களை நோக்குகின்றன...

வளர்ச்சி பெற்ற இந்த மக்களின் சிந்தையில் இந்தச் சின்னங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் எவை? என்பதான தேடலாய் என்னுள்ளும்....

தங்கள் பூர்விக நம்பிக்கைகளூடாக பிணைத்திருக்கும் தேசிய சின்னங்கள், கொடிகள் மற்றும் அந்த நாடுகள் கொண்டிருக்கும் கதைகள் எல்லாமே என்னுடன் ஏதோ பரிமாறவேண்டும் என்று துடிப்பதுபோல ஓர் உணர்வு எய்தி நிற்கின்றேன்.

யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்ற எங்கள் சங்கக் கவியின் வார்த்தைக்கு ஓர் அர்த்தம் உணர்கின்றேன்.

அந்த வகையிலே எனது புலப்பெயர்வு நாடான டென்மார்க்கின் தேசிய சின்னமாக எழுந்தருளி இருக்கும் கடற்கன்னி தனது சோகமயமான கதையைக் கூறி என்னையும் கலங்க வைக்கின்றாள்.

மீன்வாலுடன் கூடிய மனித குலப்பெண்ணே அவள்.

கடல் அரசனின் மகளான அவளும் ஆழ்கடலின் கீழ் இருந்து மனித உலகம் மீது தேடுதல் நடத்தியவள்தான். அந்தத் தேடலே

அவளிலே ஏக்கமாக எழுந்து, ஒரு மனிதனை விரும்பி, மனிதருக்கு இருக்கும் உயர்ந்த சிறப்புக்களை தானும் அடைய எத்தனித்துத் தோற்றுப்போய் பின்னர் தியாகியாகி உயிர் நீத்துவிடுகிறாள். அவளது தேடுதலும், தியாகங்களும் அவளை அழியும் கடல்நுரை ஆக்கவில்லை. ஏனைய சிருட்டிகளுடன் இணைந்து மனுக்குலத்தை வாழவைத்துக் கொண்டிருக்கிறாள். மனிதருக்கு ஆரோக்கியம் தரும் தென்றல் காற்றாக வீசிக் கொண்டு இருக்கிறாள். தனது இடையறாத் தேடலினால் பல துயரைச் சந்தித்த அவளுக்கு மேலும் சோதனை ஏற்படவேண்டுமா? மனிதரின் வாழ்வு இறுதியில் கிடைக்கும் அழியாத ஆன்மா பதவிபோல அவளும் பெற்றிட எங்கள் உலகிலே 300 ஆண்டுகள் காக்க வைக்கவேண்டிய அவசியமே இல்லை.

தியாகமும், சகிப்புத்தன்மையும் கொண்டு காற்றின் செல்வியாக, அருவமாக உலகை வலம் வந்து மனித குலத்திற்குச் சேவை செய்து கொண்டு இருக்கும் அவள் மனிதர் போல அந்த நித்ய ஜீவன் பதவியை இலகுவிலே அடையும்படியாகச் செய்யவேண்டியது மனித குலத்தின் கடமை!

இங்கு வளரும் ஒவ்வொரு குழந்தையும் வன்முறை, பொறாமை, அகந்தை நீங்கியவர்களாய் பெற்றவர்களை மகிழ்விக்கும் ஓர் ஆரோக்கியமான குழந்தையாக வளர்ந்து அந்தக் கடற்கன்னியை மகிழ்விக்கவேண்டும். அந்த மகிழ்ச்சியால் அவள் தனது இலட்சியக் கனவுக்காக 300 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதன் அவசியம் இல்லாமல் இலகுவிலே அந்த மோட்ச ராட்சியத்தில் நீந்திச் சேர முடியும்.

இவ்வாறாக டென்மார்க்கில் நிறுவப்பட்ட இந்த தேசிய சின்னம் கூறும் கதை நெஞ்சை உருக்கும் வகையில் நின்று கொள்கின்றது.

அந்த தேசிய சின்னத்தின் நோக்கம் இந்த நாட்டிலே முழுத்துவம் அடைகிறதாக எனது உள்ளுணர்வு உரைத்தபோது தமிழர்தம் மரபுக்கு ஒவ்வ கடற்கன்னி எனது பேனாவால் காவியமானாள்.

கடற்கன்னி பற்றிய நம்பிக்கை ஆரம்பத்தில் ஆசிய நாட்டிலிருந்தே இங்கே பரவியது என்பதும்; இஸ்கன்டிநேவிய நாட்டினர் கி.பி. 1200க்களில் மேற்படி பெயரை முதன்முறையாக கையாண்டு இருக்கின்றனர் என்பதும் வரலாறு.

இந்த இஸ்கன்டிநேவியன் நாடுகளில் ஒன்றான டென்மார்க்கின் ஒவ்வொரு 50 கிலோமீற்றர் நிலத் திணிவுகளுக்கு இடையே நிச்சயம் கடல் நீரைக் கண்டுதான் ஆகவேண்டும்.

முன்னைய டென்மார்க் சந்ததியினர் கடல் வாழ்வுடன் ஈடுபட்டவர்கள். ஆரம்பத்தில் அவர்கள் கடற்கொள்ளைக்காரர்கள். அவர்களிடம் அப்போது பல தெய்வ வழிபாடும் மூட நம்பிக்கைகளும் இருந்ததாகக் கூறப்படுகின்றது. அப்போது கடலிலே கடற்கன்னி தெரிவதான ஒருவகை நம்பிக்கை நிலவி இருந்திருக்கிறது. கடற் கன்னி போல முன்னைய பபிலோனிய நாகரிகத்தில் அவர்களின் மூன்று பெரிய ஆண் கடவுள்களில் ஒருவர் தலைக்குக் கீழே மீன் உடலுடன் மாறக்கூடியவர்.

முன்னைய கிரேக்கத்திலோ கடற் கன்னி வடிவம் என்பது இறந்தவர்களின் ஆவி. இரத்தக் காட்டேரி. அவை மனிதரை மயக்க கொடியதாக இசைபாடும் தன்மை கொண்டவை. பாலியல் சிந்தனைகளை ஊட்டும் பாடல்களால் மக்களை மயக்கி மரிக்கவைப்பன என்று கூறப்படுகின்றது.

அவ்வாறே ஜேர்மனியிலும் ஒரு நம்பிக்கை இருந்து வந்திருக்கின்றது. றைன் நதியிலே படகிலே வருவோரை அங்குள்ள பாறை ஒன்றில் இருந்து இனிய பாடலால் மயக்கி அந்த இசையிலே மெய்மறந்து போகும் அந்தப் படகினரை பாறையிலே மோதவைத்து கடற்கன்னி கொன்று விடுவாள் என்பதாகும். எங்கள் இந்துப் புராணங்களிலே தமிழர்தம் பண்டை இலக்கியங்களிலே மீன் அவதாரம் எடுத்த மகாவிட்டுணுவும், மச்ச கன்னியரும், மட்டுமல்ல தமிழ் காத்த, கடல் வணிகத்தில் மூத்த பாண்டிய மதுரையின் மீனாட்சியும் இதுவகைத் தொடர்புடையவளே.

எமது தமிழ் ஈழத்தின் திருக்கோணமலையிலும், தீவுப் பகுதிகளிலும், கடற்கன்னி பற்றிய கதைகள் நிலவுகின்றன. மட்டக் களப்பு நகரிலும் அவ்வாறான நம்பிக்கையுடன் அம்மாநகர் மீன்பாடும் வாவி என்பதாய் சிறப்பிக்கப்படுகிறது. 1842-ல் அமெரிக்காவின் நியூயோக் மாநகரில் உள்ள ஓர் ஊரிலே உள்ள நூதனசாலை ஒன்றில் காட்சிக்கு வைக்கப்பட்ட பொருள்களிலே எகிப்திய மம்மியுடன் தொடர்பான கடற்கன்னியின் உருவமும் வைக்கப்பட்டிருப்பதாகக் கேள்வியுற்ற அவ்வூர் மக்கள் முண்டியடித்துக்கொண்டு அவ்விடம் விரைந்தனர். அங்கே அவர்கள் கண்டது மீனின் வால் கொண்ட குரங்குச் சிலை ஒன்றே. கடற்கன்னி பற்றிய உலக நம்பிக்கைகளில் டென்மார்க் தனது தேசிய சின்னமாக தலைநகர் கொப்பனேகனில் உள்ள கடற்பாறையில் கடற் கன்னியை நிறுவிக் கொண்டது 1913-ம் ஆண்டிலே ஆகும்.

கடற்கன்னி பற்றிய பூர்விக நம்பிக்கைகளூடாக டென்மார்க் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற எழுத்தாளர் எச்.சி அண்டர்சன் அவர்கள் கடற்கன்னி என்னும் அமரத்துவம் வாய்ந்த கதையை நிறுவி இருக்கிறார்.

அவர்தம் எழுதுகோல் உருவாக்கிய கதாநாயகி கடற்கன்னியை எரிக்சன் என்னும் கலைஞர் 1913-க்களில் ஓவிய வடிவிற்குக் கொண்டுவந்தார்.

அதுவே பின்னர் சிலையாக நிறுவப்பட்டு டென்மார்க்கின் தேசிய சின்னம் என ஆயிற்று.

அமரத்துவக் கதைகள் தந்த அண்டர்சன் படைப்புக்கள் டென்மார்க்கின் தேசிய உடமை ஆக்கப்பட்டதற்கு ஒப்ப அவரது கடற்கன்னிக் கதையூடாக அவர்கள் நாட்டின் தேசிய சின்னத்திற்கும் அவரால் ஒரு பொலிவும் பிறந்தது. பூர்விக அடையாளச் சின்னம் ஒன்று இன்றைய நடைமுறை உலகிற்கு ஏற்றாற்போல தேசிய சின்னமாக நிறுவப்பட்டிருக்கிறது என்பதும்; தனது நாட்டை நேசித்த - உலகம் போற்றும் ஒப்பற்ற எழுத்தாளர் அண்டர்சனை இந்த நாடே

தேசிய எழுத்தாளர் ஆக்கி அவரது உடமைகளை நூதனசாலையில் வைத்து பெருமை சேர்க்கிறது என்பதும், எனது சிந்தையிலே இப்படியாக நின்று கொள்கின்றது... முன்னைய நம்பிக்கைகள், வழிபாடுகளை மூடமை என்று முற்றாக அழித்துவிடக் கூடாது. அந்த அடிப்படை நம்பிக்கைகளை இன்றைய நடைமுறை உலகிற்கு ஏற்றாற்போல மாற்றி அமைத்து அந்த அடையாளங்களை வாழவைக்க வேண்டும்.

அவ்வாறு தங்கள் நாட்டிலே ஒரு பிடிமானம் ஏற்பட வகை செய்தலால் ஒரு நாடு நேர்மையான, பண்பான, தேடுதல் நிறைந்த பிரசைகளை உருவாக்கி நாட்டுப் பற்றையும் பேணும் என்பதாகும்.

நாட்டுப் பற்றும் ஆன்ம நேயமும் கூடிய எழுத்தாளர்களால் இந்த உலகை அன்பு சாம்ராச்சியமாக மாற்றி அமைக்க முடியும் என்ற நம்பிக்கையை டென்மார்க்கின் அமரக் கதைகள் படைத்த அண்டர்ன் விதைத்துத்தான் இருக்கின்றார். இந்தக் கதையை தமிழிலே காவியமாக, இங்கே வெளிவரும் தமிழ் டேனிஸ் நட்புறவுச் சஞ்சிகையில் தொடராக எழுதிக்கொண்டு இருந்தபோது பெரியவர்களும், சிறியவர்களும் படித்து மகிழத்தக்க வகையில் கவிதை எளிமைப் படுத்தப்பட்டது கண்ட பல அன்பர்கள் தமது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டனர்.

குறிப்பாக இங்குள்ள ஒரு பெண் எழுத்தாளர் சகோதரி திருமதி வேதா இலங்காதிலகம் என்பவர் எனது முதல் கவிதைத் தொடர் கண்டபோது மெய்சிலிர்த்ததாக மேற்படி இதழில் எழுதி இருந்ததும், எனது பேனா வலுப்பெற தொலைபேசியில் வாழ்த்திக் கொண்டதும் நன்றி பாராட்டத்தக்கது.

இது மிகவும் கடுமையான பணி. இதனை, செம்மையாக தமிழிலே கதை வடிவிலே கொண்டு வருவதே கடினம். எப்படி இதனை எளிய தமிழில் காவியமாக்கினீர்கள்? என்று வியந்து போற்றியும் பலர் உற்சாகம் தந்தனர்.

டேனிஸ் மூலக் கதை சிதைவடையாது தமிழிலே மொழி பெயர்த்துக்கொண்டே, அதன் விறுவிறுப்பு குன்றாமல் பார்த்துக்கொண்டு எளிமையான பழகு தமிழ்ச் சொற்களைத் தேடி கவிதைகளை ஆக்கும்போது, பல சிரமங்களை எதிர்கொள்ளத்தான் வேண்டி இருந்தது. அவ்வாறான இடங்களில் யாப்பிற்குள் முற்று முழுதாக நில்லாமை என்பதை எனது குறைபாடாகக் கருதவில்லை.

எனது நோக்கம் ஏற்கனவே கூறியதுபோல் மேற்குலக நம்பிக்கைகளிலிருந்து எமது தமிழினம் தமது தேடல்களில் ஏதும் தன்னிறைவு காண்பது ஒன்றே!

இந்த உலக காவிய வரிசையில் கடற்கன்னியைத் தொடர்ந்து ஏனைய நாடுகளின் தேசிய அடையாளங்களும் காவிய வடிவம் பெறும்.

எனது நூலுக்கு அணிந்துரை வழங்கி இருப்பவர் கொழும்புப் பல்கலைக் கழக முன்னாள் கல்வி உளவியல் துறைப் பேராசிரியரும், கலைஞருமான எனது ஆசான் டாக்டர் ச. முத்துலிங்கம் (ஞானதீபம்) அவர்கள்.

அவர் ஓர் உளவியல் பேராசிரியரும் கலைஞருமானபடியால் அவரின் அணிந்துரை இந்த நூலின் நோக்கத்தை உள்வாங்கும் என எனது உள்ளுணர்வு சொல்லிற்று. தமது முதுமையிலும் மிகவும் உற்சாகமாக தேடுதல் நடத்திக் கொண்டிருக்கும் எனது ஆசான் எனது நூலுக்கு அணிசேர்த்தமைக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற உலகத் தமிழர் மாநாட்டிற்கு வருகை தந்து தனது ஓய்வு நேரத்தில் எனது கடற்கன்னி காவியத்தைப் படித்து ஆசிஉரை வழங்கியவர் சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர். கோதண்டராமன் (பொற்கோ) அவர்கள். அவருடனான இனிய உரையாடலும், தாம் கொண்டு வந்த மொழியியல், மற்றும் ஆய்வு நூல்களை எனக்கு அன்பளிப்புச் செய்ததும், மேற்படி ஆபிரிக்க மாநாட்டின் எனது ஆய்வுரை குறித்துப் பாராட்டியதும் இறைவன் தந்த வரமே என வாங்குகின்றேன்.

ஊரிலே எனக்கு இனிக்கும் யாப்பினை தமது திருக்கரத்தால் செய்தளித்து என்னைக் கவி எழுத வைத்தவர். இன்று கோயிலாகி அருள் சுரக்கும் தெய்வம் - இந்நூலிலே சமர்ப்பணமாகி இருக்கும் எனது குருவானவருடன் இருந்த எனது அந்தப் புண்ணிய நாட்கள்...

30 ஆண்டுகளுக்கு முன்பான அந்தப் பசுமையான நாட்களிலே இன்றைய எமது தேசியக்கவி சகோதரர் புதுவை இரத்தினதுரை அவர்கள்... சகோதரர்கள் நல்லை அமிழ்தன், திருச்செல்வம், கனடா ஒலிபரப்பைச் சேர்ந்த கணபதி ரவீந்திரன், சத்தியபாலன், இராதா மனோகரன் என்ற வரிசையில் அடிக்கடி கவியரங்கில் சந்திக்கும் நட்புறவுகளில் ஒருவர்...

எனது கவிதைகளை அன்று மனம் திறந்து பாராட்டியவர். அப்போது வண்டு என்ற மருத்துவ இதழ் ஆசிரியர் - இன்று யாழ் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர். எனது மதிப்பிற்குரிய சகோதரர் டாக்டர். எஸ். சிவலிங்கராஜா அவர்கள் இந்த நூலுக்கு அளித்திருக்கும் சிறப்புரைக்காக - அந்த பசுமையான எண்ணங்களை மனதிலே விதைத்து என்னைக் கலங்கச் செய்தமைக்காக அவருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவர்தம் உரையை எனக்கு தொலை நகலில் அனுப்பிவைக்க உதவியவர் எனது மாமனாரும், மேற்படி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவரும், சட்ட அறிஞருமான அ. இராஜரத்தினம் எல்எல்.பி அவர்கள். அவரது ஊக்கமுரைக்கும் உரைகள் இந்த உலகிலே என்னைச் செம்மைப் படுத்தியபடி... என்றும் எனது மனமுவந்த நன்றிகள்.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் வரிசையில் சிறப்பிடம் வகிக்கும் சகோதரி யோகா பாலச்சந்திரன் அவர்கள் நாடறிந்த எழுத்தாளர்., சிந்தாமணி பத்திரிகை உதவி ஆசிரியையாக, இலங்கை வானொலியை அலங்கரித்தவராக அன்று பிரபல்யமானவர். எனது இந்த இலக்கிய முயற்சி நிச்சயம் சிரஞ்சீவித்துவம் பெறும் என்னும் அவரது வாக்கை தமிழ்த்தாய் வாக்காக கொண்டே தலை

வணங்குகிறேன். எமது தாயகத்தைச் சேர்ந்தவரும், தமிழகத்தின் பிரபல சினிமா இயக்குனருமான சகோதரர் பாலுமகேந்திரா அவர்களது வாழ்த்துரைவழி எங்கள் எதிர்காலக் குழந்தைகளின் ஆக்கத்திற்கு ஆவன செய்யவேண்டும் என்னும் அவர்தம் அன்பு வேண்டுகோள் உலக காவிய நோக்கு என்பதாகி, அவர்தந்த உந்துகை என்றே உள்வாங்குகின்றேன். உலகம் போற்றும் அந்த மாபெரும் கலைஞருக்கு நன்றி நவில்கின்றேன்.

இம்மேற்குலகில் அனைத்துலக தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் (ஐபீசி) வானொலி தோன்றியபோது பாலைவனத்திலே பசுஞ்சோலையாக.... அது தமிழர் குரலாக முழங்க வகை செய்த பெரியார் ஏ. தாசீசியஸ் (ஈழக் கூத்தன்) அவர்கள். முதுபெருங் கலைஞர். அவர்தம் அன்பான வாழ்த்து மடல் எனது களைப்பை மறக்கவைக்கும் மாமருந்தாக... அவர்தம் அன்புக்குத் தலை வணங்குகின்றேன்.

எமது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க அமைப்பு நடவடிக்கைகளுக்கு பக்க பலமாக உழைப்பவரும் மேற்படி அமைப்பின் டென்மார்க் செயலதிபருமான அருமை நண்பர் இரா. இராசேந்திரம் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை எனது பணிகளுக்கு ஊக்கம் தரும் என்பதாக எனது நன்றி வெளிப்பாடுகளை உடமையாக்குகின்றேன்.

இந்த மேற்குலகைச் சேர்ந்த எனது பிள்ளைகளின் டேனிஸ் ஆசிரியர்கள் திருமதி இங்கா யூல் (Inga Juul) திரு. பியொர்ன் ஜென்சன் (Bjorn Jensen) ஆகிய இருவரும் கடற்கன்னி பற்றிய மேலதிக ஆவணங்களை சேகரிக்க எனக்கு உதவி நின்றனர்.

ஜென்சன் அவர்கள் எங்கள் தாயகமாம் திருக்கோணமலையில் நீண்ட காலத்தின் முன் கடமை ஆற்றியவர். கீழைத் தேசத்தவர்களான எங்கள் பண்பாடு கலாச்சாரங்களில் பற்று மிக்கவர். வயோதிபரான அவர் தாம் ஒரு காலத்தில் தரிசித்த எங்கள் தாயகத்தை நினைவு கூர்ந்து மகிழ்வெய்துவார். இந்த நூலுக்கு அவர்

அளித்த வாழ்த்துக்கூட எனக்கு மட்டுமல்ல தமிழ் கூறு நல்லுகிற்கு என்றே உள்வாங்கி மகிழ்கின்றேன்.

எனது சிறுவயது நண்பரும், இலண்டன் கிங்ஸ்ரன் பல்கலைக் கழகப் பேராசிரியருமான டாக்டர் எஸ். தேவேந்திரநாதன் அவர்கள் எனக்கு அடிக்கடி உற்சாகம் தந்தபடி இருப்பவர். எனது தாயகத்திலே எழுத்தறிவித்த எனது கல்லூரியின் அகில உலக பழைய மாணவர் சங்கத்தின் ஐக்கிய ராச்சியக் கிளையைச் சேர்ந்தவர்களாக இவருடன் அருமைச் சோதரர் ராஸ்ரி கணேந்திரன் எம்எஸ்ஸி அவர்களும் ஏனைய நண்பர்களும் இலண்டன் மாநகரிலே 19.01.2002-ல் எனது ‘அரைமனிதர்கள்’ நூல் வெளியீட்டு விழாவை மிகவும் சிறப்பாக நடாத்தி என்னை கௌரவித்தனர்.

அன்பின் அடையாளமாக இந்த நூலுக்கு வாழ்த்துரையும் அளித்தமைக்கு அவர்களுக்கு எனது நன்றியறிதலை வெளிப்படுத்துகின்றேன்.

“உங்கள் திறமைகளை வீணாக்கி விடாதீர்கள், வெளிக்கொண்டு வாருங்கள்” என தொலைபேசியில் எனக்கு அடிக்கடி உற்சாகம் தரும் அருமை நண்பர் இராச கருணா அவர்கள், தமது ஈழம் பத்திரிகையில் என்னையும் ஆசிரியராக இணைத்து ஜேர்மனியில் இருந்து எனக்கு உற்சாகம் தந்து கொண்டு இருப்பவர். பண்புள்ளம் படைத்த அவருக்கும் எனது நன்றிகள்.

எனது இந்த இலக்கியப் பணிகளுக்காக, அடியேன் சுகயீனமுற்று இருக்கும் வேளையிலும் தங்கள் ஒத்தாசைகளை தந்து நிற்பவர்கள் எனது பிள்ளைகளான கதாதரன், சத்ய தர்சினி, சுஜிதரன். இவர்களது உதவி இல்லையேல் என்னால் இந்தப் பணியை இலகுவிலே நிறைவேற்றி இருக்கமுடியாது. தாயகத்திலே அமைதி வாழ்வுக்கான சமிக்ஞை தென்படும் இந்த நேரத்தில் எனது நூலும் முற்றுப் பெற்றிருப்பது இறைவனின் ஏற்பாடாகத்தான் இருத்தல் வேண்டும் என்றே எண்ணத் தோன்றுகிறது.

எனக்கு வாழ்த்துரைத்த - பாராட்டுக்கள் தெரிவித்த அனைத்து நண்பர்களையும், பெரியவர்களையும் பட்டியல் போடின் உரை நீண்டுவிடும்.

தயைகூர்ந்து குறை விளம்பாது எனது நன்றிகளை அனைவரும் ஏற்றுக் கொள்வார்களாக...

இந்த நூலை அழகிய முறை'யில் பதிப்பித்து வெளியிடும் அருமைச் சகோதரர் ரவி தமிழ்வாணன் அவர்களுக்கும் அவரது மணிமேகலை குடும்ப ஊழியர்களுக்கும் எனது நன்றிகள்.

இனி வாசகர்களான உங்களிடம்!

இந்த நூல் பற்றிய குறை நிறைகளை, ஆலோசனைகளை எழுதுங்கள்... உங்கள் கருத்துக்கள் ஒவ்வொன்றும் தமிழ்த்தாயை அலங்கரிக்கும்!

வாழிய தமிழ்!

வளர்க உலகத் தமிழர்தம் ஒன்றிணைவு!

மலர்க ஆன்மநேயம்!

**பாரதிபாலன்**
(பண்டிதர் கு. ஜெயக்குமார்)

Pandit **K. Jeyakumar**
(Poet. Bharathibalan)
Norregade-13. b1.tv,
4534, Hørve, Denmark.
e-mail: bharathi@mail.dk


## தென் ஆபிரிக்கா தமிழ் கூட்டிணைப்புக் கழகம் நடாத்திய உலகத் தமிழர் விழாவில் கவிவேழம் பாரதிபாலன் அவர்கள்



தென் ஆபிரிக்கா தமிழ் இணைப்பாளர்களுடன் பாரதிபாலன் அவர்கள்.




டர்பன் தெருவில் உலகத்தமிழர் கலந்துகொண்ட ஊர்வலத்தில் மாநாட்டு கொடியேந்தி நிற்கிறார், பாரதிபாலன் அவர்கள்.



தென் ஆபிரிக்க தமிழ் மாநாட்டு மண்டபத்தில் பாரதிபாலன் ஏனைய பிரமுகர் வரிசையில்



பாரதிபாலன் அவர்கள் விழாவிற்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர் மாநகர முதல்வர் தமிழரான மதிப்பிற்குரிய லோகன் அவர்களுடன் உரையாடும்போது...




தென் ஆபிரிக்காவில் சிறந்த தமிழ் உணர்ச்சி மிக்க உயர்காவல் துறைப் பணிப்பாளர் பாலா அவர்களுடன் பாரதிபாலன்.



தென் ஆபிரிக்க வள்ளலார் சந்நிதியில்



தென் ஆபிரிக்க மாநாட்டுக்கு வருகை தந்த சென்னைப் பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர். கோதண்டராமன் (பொற்கோ) அவர்களுடன் பாரதிபாலன் அவர்கள்.




தென் ஆபிரிக்காவில் சிறந்த தமிழ்ப்பற்று மிகுந்த தனசேகரன் அவர்களின் பிள்ளைகள் பாரதிபாலன் அவர்களை வழியனுப்பி வைக்குமுன் டர்பன் கடற்கரையில்...



கனடாவில் இருந்து வருகை தந்த கீதவாணி வானொலி அதிபர் ராஜகுமாா மற்றும் உதயன் பத்திரிகை ஆசிரியர் லோகன் அவர்களுடன் பாரதிபாலன் அவர்கள்.



இலண்டனில் "அரை மனிதர்கள்" நூல் வெளியீட்டின் போது பழைய மாணவர் சங்கத்தின் சார்பாக தமிழ்ச் செம்மல் கலைப் பொழில் இரா. ஜோகேந்திரராஜா அவர்கள் பாரதிபாலன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார். "பன்முக பாரதி" பட்டத்தையும் மேற்படி சங்கத்தில் வழங்கும் காட்சி.

# உலக காவிய நூல் வரிசை : 1



# கடற்கன்னி காவியம்

டென்மார்க்கின் தேசிய சின்னம் கொண்டிருக்கும் கதைக்கான
தமிழ்க் காவிய வடிவம்

## கடல் வர்ணனை!

தேர்ந்தஓர் தானியம்
தரும்செடி மலர் இதழ்! - அதன்
நீல வர்ணமாம்! - கடல்
நினைக்கவே தூண்டிடும்!

பார்ப்பவர் முகமோ
பளிச் எனும்! - தூய
பளிங்குக் கண்ணாடியாம்!
பரவசம் நீர்முகம்!

எந்தநங் கூரமும்
எட்டியே தொட்டிடா! - பெரும்
ஆழக் கடல்! - வெகு
தூரத் திருப்பது.

கடல்அடி இருந்து
கடல்மடி கிளம்பவோ?
பாதையாய்ப் படிகளாய்ப்
பல தேவைப்படும்!

தேவா லயங்களின்
திகழ் கோபுரங்களைக்
கணக்கின்றி அடுக்கினால்
கடல்மடி காணலாம்!

அந்தக் கடலின்
ஆழம் அப்படி!
அதன்கீழ் வாழ்பவர்
ஆழ்கடல் மனிதர்!

## ஆழ்கடல் வர்ணனை!

ஆழக் கடல்எனில் - எங்கும்
அடித்தள விரிப்பெனச்
சூழும் வெண்மணல்
சூனியம் என்பதா?

தெளிந்தநீர் தன்னில்ஓர்
சலனமே தோன்றிடில்
துடித்திடல் போல்வதாய்
துவள்தலும், நெளிதலும்!

இலை தண்டுகள்வழி
இவ்வகை உறவுகள்!
மலைப்புறச் செய்யுமே
மரஞ்செடிக் கடல்அடி!

காற்றில்எம் கண்களில்
கவின்மிகு பறவைகள்
சிறக்கையால் நீந்துமே
சின்னதும் பெரிதுமாய்!

அவ்வகை ஒக்குமாம்
அனைத்துமீன் இனங்களும்! - கடல்
மரக்கிளை வலம்வரும்! - பெரும்
மகிழ்ச்சியில் துள்ளிடும்!

இத்துடன் நின்றிடா(து)
இக்கடல் அடியது!
இன்னும்பேர் ஆழமே - கடல்
இராசனின் அரண்மனை!

## ஆழ்கடல் அரண்மனை!

ஆழக் கடல்அரண்!
ஆங்(கு) அதைச் சூழ்ந்த... நீள்
பக்கச் சுவர் எல்லாம்
பவளப் பாறையாய்...!

பளிச்சிடும் கூர்முனைப்
பலகணி அனைத்துமே
கூட்டுக் கல்எனும்
கவின் அம்பர் ஆனதாய்...

உச்சி முகடுஅது - கடல்
ஓட்டநீர் தாங்கியே
திறந்தும் மூடிடும் - சிப்பி
ஓடுகள் ஆனதாய்....

-அந்த
சிப்பிகள் அனைத்திலும்
சிறப்(பு) அலங்காரமோ
முத்(து)ஒளி சிந்தும் - மா
ராணியின் மகுடமாய்....

## கடல்ராஜன் குடும்பம்!

கடல்மனி தர்களைக்
காத்திடும் ராசனோ
மனைவியை இழந்தே
வருடங்கள் ஆனதாம்!

இல்லக் கிழத்தியே
இல்லா அவன் மனைக்(கு)

ஏற்றநீர் வாகியாம்
இராசனை ஈன்ற தாய்!

## இராச மாதா!

மதிநுட்பம் மிகு
மூதாட்டிஅவள் - தான்
மேட்டுக் குடிஎனும்
மமதையில் மிதப்பவள்...!

சிப்பிகள் ஆறுதான்! - அதைச்
சிறப்புற அணிந்து தம்
குலத்தின் உயர்வினைக்
கூறும்அம் மரபிலே - தன்றன்

பெயர்த்திகள் அறுவரை(ப்)
பாசமாய்ப் பேணலாய்...
பாட்டிதன் புகழை அங்கு
பலவாறு உயர்த்தினள்!

- அந்த
மன்னனை ஈன்ற தாய்
வாலிலே பூட்டினள்
பன்னிரு சிப்பிகள்! - அதில்
பெருமையைக் காட்டினள்!

## அரச குமாரிகள்!

- அந்த
அரச குமாரிகள்
அறுவரும் அழகுதான்!
அவர்களில் சிறியவள்
அழகிலும் அழகியே...!

## சின்ன அரச குமாரி!

- அவள்
உரோசாப் பூவிதழ்த்
தோல்எழில் கொண்டவள்!
பளிச்சிடும் தூய்மைப்
பளிங்கு மேனியள்!

நீர்ச்சுனை ஆழமே
நீலமாம் வர்ணமாய்
நீலக் கண்களை
நினைவு எனத் தருபவள்!

# மீன் வால் பாதம்!

அந்தப் பகுதியின்
அனைவரைப் போலவே
அவளின் கால்களும்
அமைந்தது மீன் வால்என.....!

# அரண்மனை உள்ளே!

அரண்மனை கொண்ட
அகல் மண்டபங்களின்
சுவரெலாம் பூஞ்செடி!
செய்வதோ இயற்கையாம்!

அரச குமாரிகள்
அறுவரும் ஆடுவர்
அனைத்து நேரமும்
அந்த மண்டபங்களில்....

- எங்கள்
வீட்டு அறை யன்னலை
விரியத் திறந்திடில்
விரைந்து உள் புகுந்திடும்
வசந்தப் பறவைபோல்....

- அங்கே
அழகிய அம்பார்
யன்னலைத் திறந்திட
மீன்இனம் நீந்தி அம்
மாளிகை உட்புகும்...

- அவை
மாளிகை உலகு அதன்
மாயத்தில் மகிழ்வுறும்!
சுதந்திரம் பெற்றதாய்
சுற்றியே திரிந்திடும்...

அரச குமாரிகள்
எழில்தளிர் கரங்களே
வழங்கும் உணவினால்
வருடலால் மகிழ்வுறும்...

## அரண்மனைத் தோட்டம்!

அரண்மனைக்கு அப்பால்
அகன்றதாய் அடர்ந்ததாய்
மாயம் செய்தலாய்
மரஞ்செடித் தோட்டமாம்.

- அவை
கருமையாய் நீலமாய்
நெருப்பு எனச் சிவந்ததாய்
காட்சிகள் செய்திடும்! - அந்த
காடு அடர் மரங்களோ...

- அங்கு
இலை தண்டுகளினை
இடையறாது அசைத்தலால் - அதன்
பழங்களோ பொன்எனும்!
பூக்களும் நெருப்பெனும்!

## நீல மாயத்தில்

அனைத்தையும் தன்னுள்ளே
அவ்விடம் ஆக்கிடும்!
ஆங்கு ஒரு நீலத்தில்
அடி நிலம் தூங்கிடும்...

- ஆம்
வெண்மணல் பரப்பு அது
வேறு பட்டு இப்படி
கந்தகச் சுவாலையாய்
காட்சிகள் செய்திடும்...

ஆங்குள அனைத்துமே
ஆகும் ஓர் கனவுதான்! - அவை
தூங்கும் ஓர் நீலத்தில்
தோய்தலைக் காணலாம்!

## ஆழ்கடல் வான்வெளி!

- நாங்கள்
அந்தரக் காற்றிடை
ஆகாய வெளியதில்
நின்றுதாம் நோக்கிடில்
நிலனும் வான் மாயமாய்...

- அங்கே
அடிமுடி சூழ்ந்து ஓர்
ஆகாயம் ஆனதாய்
ஆக்கும் ஓர் கோளமே - கடல்
அடிநிலத் தோற்றமாம்!

## கதிரவன் தோற்றம்!

அசைவுகள் அடங்கி - நீர்
அமைதி என்று ஆகையில்
ஆதவன் தோற்றத்தில்
அழகொன்று காணலாம்...

கத்தரிப் பூநிறம்! - அது
கடலின்கீழ் கதிர்ஒளி! - ஒரு
குவளையைக் கவிழ்க்கையில்
கொட்டும்ஓர் காட்சியே...

## கடல் பாவையர் பூம்பாத்திகள்!

அரச குமாரிகள்
அவரவர் தோட்டத்தை
ஆறு வடிவமாய்
அமைத்ததைக் காணலாம்!

ஒருத்தி தன் தோட்டத்தை - தங்கள்
ஆழ்கடல் விலங்கு எனும் - பெரும்
திமிங்கில வடிவிலே
செய்தனள், மற்றவள்....

தங்களுக்கு இளையவள்
தனி அழகு ஆனதால்
அங்கு தன் தோட்டத்தை
அவள் என ஆக்கினள்.

## சின்னவள் தோட்டம்!

சின்னவள் தோட்டமோ
சூரியன் வடிவமாம்! - அந்தச்
செம்மலர்ப் படுக்கையின்
செவ் ஒளி அற்புதம்!

## தோட்டச் சோடனை!

- அங்கு
அக்கைமார் தோட்டத்தை
அலங்கரித் திடுவராம்! - கப்பல்
உடைந்தே மூழ்கையில் - பெற்ற
அதிசயப் பொருட்களால்....

## சின்னவள் சோடனை!

தமக்கையர் போலில்லாள்
சின்னவள், அவளது
அமைதியோ அழகிடும்!
அறிவும் ஓர் அற்புதம்!

- அவள்
சூரியன் போன்ற தன்
சிவந்த ரோசாக்களுக்கு

இடையில் ஓர் பையனின்
எழில் சிலை பெற்றனள்.

பளிச் எனும் வெண்மையாம்
பளிங்குச் சிலையதை - பூம்
பாத்திக்கு அருகிலே
பாங்குற வைத்தனள்!

- எழில்
சிலை அதைச் சிறப்பிட - வெளிர்
சிவப்பினால் ஆன ஓர்
பூங்கொடி நாட்டினள் - அது
பூங்குடை ஆகியே................

நீலம் செய் மணலில் தன்
நீள்கிளை சேர்த்தலால் - செந்
நீலமாம் வடிவு என - கிளை
நிறுத்தும் ஓர் காட்சியாம்!

- அந்த
ஆடும் கிளைகளோ
ஆனந்தம் பெற்றதாய்!
கூடிக் குலாவுமாம்! - தங்கள்
வேர் அடி கொஞ்சுமாம்!

## பாட்டி சொன்ன கடல்மேல் உலகம்!

"கடல்மேல் உலகமா?" - அதன்
கதைகளைக் கேட்கையில் - அந்த
கடைக்குட்டிப் பெயர்த்தியின்
கனவுக்கண் பளிச்சிடும்!

கப்பல், மாநகர்
கவின்மிகு மானிடர்
விலங்கினம் மட்டுமா? - பாட்டி
மேலுமே தொடருவாள்!

## சுகந்த மலர்கள்!

பூமிமேல் வாசனைப்
பூக்களைச் சொல்லவும் - அங்கே
பூரித்தே போவராம்! - அது
பெயர்த்தியர்க்கு அதிசயம்!

- அவர்கள்
கடல்அடிப் பூக்களில்
கண்டிடாச் சிறப்பென - அந்தச்
சுகந்தத்தைக் கொள்ளுவர்!
சோர்ந்திடா மனத்தராய்....

- தங்கள்
அடிக்கடல் மரக்கிளை..... - அது
அழகிடும் பசுமையை.....
அம்மரக்கிளை வழி
ஓடிடும் மீன்களை............

- அந்த
மரக்கிளை மீன் எலாம்
ஒலித்திடும் பாடலை..... அது
உள்ளத்தை நிறைப்பதாய் - அங்கு
உண்மையாய் வாங்குவர்!

## மீன்கள் போல் பறவைகள்!

பாட்டியோ பூமிமேல்
பறவைகள் தன்மையை - தங்கள்
மீன்களைப் போல் என
மொழியவே, பெயர்த்தியர்....

பார்த்தறி யாதவர்
பறவைகள் என்பதால் - அங்கே
புரிந்திடல் சிரமமாம்! - அந்தப்
பறவையாம் தேடலை....

# கடல் கன்னியர் சுதந்திரம்!

"பருவ வயதோ
பதினைந்து ஆனதும் - கடல்
உயரக் கிளம்பலாம் - மேல்
உலகமே காணலாம்!

- நீங்கள்
பால்நிலா வேளையில் - அங்கே
பாறையில் அமரலாம்! - பெரும்
கப்பல்கள் செல்லும்ஓர்
காட்சியும் காணலாம்!"

பாட்டியின் வார்த்தையால்
பெயர்த்திகள் உவந்தனர்!
பதினைந்து வயதிற்காய்
பார்த்திருந்து ஏங்கினர்.

அடுத்த ஆண்டானதும்
அவர்களில் மூத்தவள்
கடலின்மேல் உலகதன்
காட்சியைக் காணலாம்!

அதன்பின்னே அடுத்தவள்!
ஆன அத் தொடரிலே - எங்கள்
இளங்கடற் செல்விக்கோ - இன்னும்
ஐந்து ஆண் டாகுமாம்!

- "எந்தன்
பருவப் போதிலே - முதல்
பயணிப்பில் பார்த்ததை - மீண்டு
பகிர்ந்தே மகிழ்வேன்!" - என
பகருவள் ஒருத்தியாம்!

- அந்த
உலகின் நடப்புகள் - தான்
ஓரளவு அறிந்ததை
பாட்டியார் சொன்னது - அங்கு
போதியது அல்லவாம்!

# கடைக்குட்டி ஏக்கம்!

அமைதியே சூடலாய்
அனைத்து நேரமும்
சிந்தையில் மிதப்பவள்
சின்னவள்!... அதிகநாள்

காத்திருந்தே தான்
கடல்மேல் செல்லலாம்!
என்பதால் அவளது
ஆவல் அங்கு அதிகமாம்!

- அவள்

ஏக்கமாய் இரவு எல்லாம்
நோக்குவாள் சாளரம்! - கடல்
நீலமே கருமையாய்! - அங்கே
நிழலிடும்; மீன்களோ...

சிறக்கை வால் அடிக்குமாம்!
துள்ளியே ஓடுமாம்!
அங்கவள் பார்வையில்
ஆழ்கடல் விம்பமாய்,

வானத்துச் சந்திரன்!
வெள்ளிகள் தோன்றுமாம்! - அவை
நீரிலே பெரிதென
நிறுத்தும் ஓர் காட்சியாம்!

தலைக்குமேல் முகில் எனும்
தன்மையாய் நகர்வதோ - அவள்
நினைப்பில் ஓர் திமிங்கிலம்! - இல்லை
நகரும் ஓர் மரக்கலம்!

- கப்பல்

அடியிலே தன் வெளிர்
கரங்களை நீட்டியே - செல்வி
ஆவலாய் இருப்பதை - மேலே
அறிந்திடார் பயணியர்!

## மூத்த கடற் கன்னி!

- இப்போ
மூத்தவள் பக்கருவ
வயதினை அடைந்தனள்! - கடல்
மேற்புறம் செல்லும் ஓர்
வாய்ப்பினைப் பெற்றனள்!

- அவள்
கடலின்மேல் கிளம்பியே
காட்சிகள் கண்டுபின்
மீண்டனள் சொல்லிட
விடயங்கள் நூறு எழும்!.....

## கிட்டவே நெருங்கிட கிட்டிடா!

"நிலவிலே நனைந்ததாய்
நீள்கரை மணல் அதில்
படுத்து அக் காட்சிகள்
பார்க்கையில் பரவசம்!

நட்சத் திரங்களாய்
நூறு என விளக்குகள்! - அது
பக்கத்தே பெரும்
பட்டினம் இருந்ததால்!

- அங்கே
இன்னிசை ஒலித்திடும்!
இரைந்திடும் வண்டிகள்!
மனிதக் குரல்எல்லாம்
மட்டுமா? எழில்செய்யும்.......

- தெய்வ
ஆலயம் பலதரும்
அதிசய கோபுரம்! - அதன்
மணிஓசை எல்லாம்
மனதினை மயக்குமே!"

இன்னுமோ பலப்பல
இருந்தன சொல்லிட! - அவள்
கிட்டவே நெருங்கிடக்
கிட்டிடா நினைவு இவை!

## அக்காள் ஊட்டிய ஆவல்!

- அந்த
அக்காள் கூறிய
அனைத்தையும் தன்னுளே
அனுபவித்து இன்பம்
எய்திய சின்னவள்....

பலகணி வழியே
பார்வையை ஓட்டுவள்! - மேலே
பரபரப் பானஅப்
பட்டினம் பார்ப்பதாய் -

- அந்த
கற்பனை உணர்வில் ஓர்
களிப்பே கொள்வதாய்
ஆலய மணிஒலி - தங்கள்
ஆழத்தில் கேட்பதாய்....

## அடுத்த அக்காள்!

அடுத்த அக்காளுமே
அனுமதி ஏற்றனள்! - அவள்
எங்குமே நீந்தலாம்
எதையுமே காணலாம்!

- அவள்
கிளம்பிய வேளையில்
கதிரவன் மேற்கிலே
மறையும் ஓர் மாலையே! - அது
மனதினை மயக்குமே!

-அங்கே
பொன் ஒளிர் வானமோ
பொலிவுடன் திகழ்ந்தது!

வர்ணனைக்கு அடங்கிடா
முகில் தரு காட்சியாம்....

கருமையாய் சிவந்ததாய்
கக்கும் செந் நீலமாய்!....
கவின் உறு காட்சியே
காட்டும் ஆகாயமாய்...

## அன்னங்கள் தந்த மயக்கம்!

- ஒரு
வெண்முகில் கூட்டமே
விரைவதை ஒத்ததாய் - பல
காட்டு அன்னங்களோ
கதிரவன் திசையதை....

நாடியே பறப்பதை - நங்கை
நோக்கினள் நீந்தினள் - அப்போது
கதிரவன் விழ்ந்தனன்! - ரோஜா
வண்ணவான் காட்சிசெய்...

எழிலினைச் சகித்திட
ஏற்றவோர் பக்குவம்
வாய்த்திடா வண்ணமாய்
வந்ததாம் அங்கு இருள்!

# மூன்றாவது அக்காள்!

அடுத்த் ஓர் ஆண்டிலே - கடல்
உயரக் கிளம்பியோள்
மற்றவர் பெற்றிடா
மனவலி உற்றவள்!

- அவள்
ஆற்று நீர் கடல் அதை
அணைக்கும் நீர்நிலை எனும்
அகல் கணவாய்ப் தனை
அண்டியே நீந்தினள்!

- அங்கே
முந்திரிக் கொடியினால்
மூடிய பசுமலை!
அற்புதக் காட்டிடை
இருந்த ஓர் அரண்மனை!

கோட்டைகள் மட்டுமா? - அங்கே
கூடியே இசைத்திடும்
பறவைகள் அனைத்தையும்
பார்த்த அப் பாவையின்

முகத்திலே சூரியன்
வெம்மையே சுட்டது! - அந்த
எரிவினை அடிக்கடி - சுழி
ஓடியே நீக்கினள்!

# மனிதப் பிள்ளைகள்!

- சிறு
சூடா அதன்நீரிலே
கூடிநிர் வாணமாய்
ஆரவா ரத்துடன்
ஆடிய அவர்களோ....

மனிதர்தம் சிறுவரே! - அவள்
மனதினைக் கவர்ந்தனர்!
அவர்களோடு ஆடிட - அவள்
ஆவலே கொண்டனள்!

- ஆனால்
அந்தப் பிள்ளைகளோ
அச்சமுற்று ஓடினர்! - அங்கே
சின்னதாய் கருமையாய் - ஏதோ
சினத்துடன் குரைத்தது -

- அந்த
விலங்கினை நாய்என
முன்னொரு போதிலும்!
அறிந்திடாக் கன்னியோ - அஞ்சி
ஆழ்கடல் விரைந்தனள்!!

# இனிமை பகிர்வு!

வியத்தகு மரங்களை - பசும்
மலைகளை மட்டுமா? - அங்கு
மீனின் வால் இன்றியே - நீந்தும்
மானிடச் சிறார்களை....

- அவள்
சிந்தையே நிறைத்ததாம் - உள்ளம்
சுகம்ஒன்று சேர்த்ததாம்! - அந்த
விந்தையாம் உலகினை - வந்து
விதம்என மொழிந்தனள்!

# அக்காள், நாலாவது!

அத்துணை துணிச்சலோ
அற்றவள் அடுத்தவள்! - அவள்
நாலாம் சோதரி! - கொடும்
நடுக்கடல் நின்றனள்!!

- அவள்
அனைத்திலும் அழகுதாம்
அக்கடல் என்றனள்! - அந்த
அகல்கடல் பரப்பினை
அளந்தனள் கண்களால்...

\- வானம்
கண்ணாடி மணிஎனும்! - அங்கு
காட்சிகள் துலக்கமாய்! - கடல்
பறவைகள் வடிவமாய் - கப்பல்
பல அங்கு பார்த்தனள்!

குட்டிக் கரணமோ
தொல்பின்கள் போட்டன! - பொங்கும்
நூறு நீருற்றுகள்! - சீறும்
நாசிசெய் திமிங்கிலம்!

## ஐந்தாம் அக்காள்!

ஐந்தாம் சோதரி!
அவளது முறைவரும்
அந்தநாள் போதுதான்
அவளது பிறந்தநாள்!

அது குளிர் காலமே
அவளிலே மூத்தவர்
கண்டிடாக் காட்சியே - மேலே
கண்டனள் முதன்முதல்!

பச்சைக் கடலிலே - பெரும்
பனிக்கட்டி நகர்வுகள்! - அவை
முத்தென வடிவுறும்! - எந்த
மனிதரும் முயன்றிடார்...

- தெய்வ
கோபுரம் தனைவிட
தோற்றத்தில் உயர்ந்தவை - அவை
வைரமாய் ஒளிருமாம்!
வியப்பினைச் சேர்க்குமாம்!

- ஒரு
கடல்பனிப் பாறையில் - அந்த
கன்னிவந்து அமர்ந்தனள்!
அங்குள்ள காட்சிகள்
அனைத்தையும் பார்த்தனள்!

காற்றில் அக் கன்னியின் - நீள்
கூந்தலோ புரண்டது! - அதோ
அனைத்துக் கப்பல்தொறும் - பனி
அச்சத்தின் அடுக்குகள்!

- அந்தி
மாலைக்குள் வானத்தை
முகில் அது மறைத்தது! - பெரும்
இடியுடன் மின்னலோ
கொடி என வெட்டிட....

கரும் அலை உயரத்தே - பனிக்
கட்டிகள் தூக்கிட - அந்தக்
கட்டிகள் செந்திறக்
காட்சிகள் சேர்த்திட...

அச்சமும் அவலமும்
ஆன கப்பல்களோ
அவசர விரைவிலே....
ஆங்கவள் கண்டனள்!

- ஆனால்
பரபரப்பு அறியா - கடல்
பாவையோ அங்கமர்ந்து
பார்ப்பளாம், நெளிதலாய் - நீலம்
பாய்ந்து அலை பளிச்சிடல்....

## மூத்த கடல் கன்னிகள் பகிர்வு!

ஐந்து சோதரிகளும் - முதல்
ஆங்குதாம் கண்டதை
புதுமையாய் எண்ணியே
பரவசம் எய்தினர்.

## மூத்தவர் ஆவல் நிறைவு!

பருவத்தை எட்டிய
பாவையர்! அவர்களோ - எங்கும்
போகும்ஓர் சுதந்திரம்
பெற்றவர் ஆயினும்

அவர்களின் ஆர்வமோ - மீண்டும்
அங்கு எழ வில்லையாம்! - தங்கள்
ஆழ்கடல் அரண் அதே - வாழ
அவர்களுக்கு ஏற்றதாம்...

## அக்காள்மாரின் அதிசய ராகம்!

அந்திமாலை பல - அந்த
ஐந்து சோதரிகளும்
கரங்களைக் கோர்ப்பராம்!
கடலின்மேல் எழுவராம்!

- ஒரு
அதிசய ராகத்தில்
அங்கவர் இசைப்பது - எங்கள்
மானிடதேசமே
முயன்றிடா மகிமையாம்!.......

- கப்பல்
சூறைக் காற்றிலே
சிக்கிடாது இருந்திட - அது
எச்சரிக்கை பெற - அதன்
எதிரிலே நீந்தலாய்....

- தங்கள்
ஆழக் கடல் அதன்
அழகினைப் பாடியே

மனப்பயம் நீக்கிட
மாலுமியர்க்கு உழைப்பதாய்...

## இசை ஞானம் இல்லா மானிடம்!

- அங்கே
புத்துணர்வு ஊட்டிடும்
பாடல்கள் புரிந்திடார்! - அந்த
மாலுமிகளுக்கு அது
மூகமோர் புயல்க்குரல்!

- கப்பல்
தளத்தினில் நிற்பவர்
செவிகளும் அவ்வகை! - கடல்
பாவையர் பாடலைப்
புரிந்திடாப் பாவியர்!

## கப்பல் உடைந்தால்....

ஆழ்கடல் அதிசயம்
அறிந்திடா மானிடம்! - கப்பல்
மூழ்கிடில் பிணங்களாய்
விழும் ஓர் இடம் அது.....

ஆழ்கடல் இராசனின்
அரண்மனைப் பக்கமே! - பிணம்
அடையுமாம்! அறிவரா?
அந்த மேல் பயணியர்!

# இளையவள் பெருமூச்சு!

மூத்த அத் தமக்கையர்
மகிழ்ந்து கை கோர்த்தவாறு - ஒன்றாய்
மாலையில் கிளம்புவர்! - கடல்
மேல்வரும் சுதந்திரம்!

- கீழே
சிறியவள் தனிமையில்!
சோகமாய் இருப்பளாம்! - கடல்
பிறவிகள் கண்களில் - கண்ணீர்
பிறப்பதே இல்லையாம்!

- அந்த
வேதனைச் செல்வியில்
விதவித சிந்தனை! - வயது
பதினைந்து ஆகட்டும்! - மேல்
பூமியை அங்கு வாழ்...

மனிதரைக் காண்பனே!
மகிழ்வனே! என்னுள்ளம்

அவர்களை விரும்புமே! - அதில்
இனிமையே காண்பனே!

இப்படித் தன்னுள்ளே
இளையவள் எண்ணினள்! - தன்றன்
பக்குவ வயதிற்காய்
பார்த்திருந்து ஏங்கினள்!!

## சின்னக் கடற் கன்னி!

- அவள்

பருவக் குமரியாய்
பக்குவம் ஆகினள்! - அவளைச்
சின்னக் கடற்கன்னி! - எனச்
சிறப்புடன் அழைக்கலாம்...

## பாட்டி அழைத்தனள்!

"பதினைந்து வயதுப்
பருவமே உற்ற என்
சின்னப் பெயர்த்தியே! - மேல்
சென்று நீ மாந்தர்வாழ்..............

பூமியைப் பார்த்திடும்
பக்குவம் எய்தினை!" - உந்தன்

மூத்த அக்காள்கள் போல்
முறைபட உன்னையும்,

அலங்கரித் திடுவனே
அருகில்வா! என்றனள்
அவர்களைக் காத்திடும்
அந்த மூதாட்டியே!

## சின்னக் கடற்கன்னிக்கு அலங்காரம்!

- சின்னக்
கடற்கன்னி தலையிலே - பாட்டி
கவினுறச் சூட்டினள்
பாதி முத்து இலங்கிடும் - வெள்ளைப்
பூச்சரம் லில்லியால்...

## குலச் சின்னம்!

அரச குடும்பம்
ஆனதை விளம்பிட
அவள் குலப் பெருமையை
அனைவரும் அறிந்திட....

எட்டுச் சிப்பிகள்
எடுத்து அவள் வாலிலே - பாட்டி
கோர்த்திடும் போதிலே - கன்னி
குழறினள் வலியினால்....

## வலியெலாம் தாங்கணும்!

"பெருவலி தாங்கணும்! - குலப்
பெருமைநாம் காக்கையில்! - அதை
பொறுத்திடல் வேண்டுமே!" - பாட்டி
பெருமையாய் சொல்லினள்!

## சுதந்திரம் இல்லாத சோடனை!

"வாலிலும் தலையிலும்
வைப்பதால் பெருமையா? - இந்த
பூச்சரம் சிப்பியைப்
பிடுங்கி நான் வீசினால்...

- எனக்கு
எத்தனை நிம்மதி
என்னதான் செய்வது!? - எந்தன்
தோட்டத்தில் மலர்ந்துள்ள
சிவப்பு ரோஜாக்களே...

எத்தனை பொருத்தமாம்
எந்தனுக்கு ஆயினும்......
அத்தனை சுதந்திரம்
இங்கெனக்கு இல்லையே!
- என
அங்கலாய்த்து ஏங்கினள்! - கன்னி
அடுக்குகள் ஆனதும்
"வருகிறேன் மீண்டு!" என
வழுக்கி மேல் உயர்ந்தனள்!

## கடல் மேல் சின்னக் கடற் கன்னி!

நீர்க் குமிழ் மேல்செல்லும்
நேர்த்தியை ஒத்ததாய்
அங்கவள் நீரின் மேல்
அழகுற ஏறினள்!

## அழகிய வானம்!

கடலின் மேற் பரப்பினை - கடல்
கன்னிகை எட்டினள் - அவள்
நீரின் மேல் தன்தலை
நீட்டிய நேரமோ.....

ஆதவன் கிரணங்கள்
அடங்கி வான் அழகிலே...
தங்கமாய்ப் ரோஜாவாய்
தகதக ஜோதியாய்....

சித்திரச் செக்கர்வான்! - அது
சுடர் எழில் சேர்த்தது - அதோ
அந்திவான் வெள்ளிகள்
அழகுடன் ஒளிர்ந்தன!

## அலங்காரக் கப்பலிலே...

அமைதியைக் கடல்செய்ய
அடித்த காற்று இதம் சொல்ல
பெருங் கப்பல் ஒன்று அதோ! - அதில்
பாய் மரம் மூன்றுள...

- ஆனால்
கடல் அதன் அமைதியால் - அந்த
காற்றிலே விரித்துள
பாய் ஒன்றே போதுமாம்!... கப்பல்
பயணிப்பிற்கு உகந்ததாய்...

- அதோ
பாய்மரக் கயிற்றின் மேல்
பெருங் கப்பல் தளத்தின்மேல்
மாலுமிக் கூட்டமே! - கீழ்
மேல் எலாம் தெரிந்தனர்!

- அங்கே
இன்னிசைப் பாடலே
எழுந்தது! இருள்வர - கூட்டு
விளக்குகள் நூறென - ஏறி
வர்ணங்கள் பரப்பின!

- அவை
அத்தனை நாட்டையும்
இணைத்திடும் கொடிகளே
காற்றிலே பறப்பதாய்
காட்சிகள் சேர்த்தன..

## கப்பலின் உள்ளே......

- சின்னக்
கடற் கன்னி நீந்தினள்
கப்பலைக் கிட்டினள்! - ஆடும்
நீரலை அடிக்கடி - மேலே
நிறுத்திட நோக்கினள்!

கப்பலின் அறைகளா? - யன்னல்
கண்ணாடிப் பளிங்கினுள் - அவள்
பார்க்கும் தோற்றங்களோ - எழில்
புத்துடை மானிடர்!

# சின்னக் கடற்கன்னி காதல்!

- அவர்களில்
அழகனாய் கருவிழி
ஆன கண்ணாளனாய் - ஓர்
இராச குமாரனே! - அவள்
இதயத்தில் அமர்ந்தனன்!

# பிறந்தநாள் கொண்டாட்டம்!

- அவன்
பதினாறு ஆண்டினைப்
பார்க்கும் ஓர் காளையாய்!... அந்தப்
பிறந்தநாள் நிகழ்ச்சியே - கப்பல்
பெருமை கொண்டாடுதாம்!

களிப்புடன் தளத்திலே
கப்பலோட் டிகளெலாம்! - நடம்
ஆடிட அவ்விடம் - அதோ
அரசகு மாரனே!

# வாணவேடிக்கை!

- எழில்
இராச குமாரனோ
அவ்விடம் வருகையில் - அங்கே
பலநூறு வாணங்கள்! - வானைப்
பகல்என ஆக்கின!

- கடல்
நங்கையோ திகைப்பினால்
நீரடி மூழ்கியே - மீண்டும்
நீட்டினள் தலைதனை!
நேரிலே காண்பதோ.......

வானவர் சொரிமலர்
வெள்ளிகள் என்பதா?
அவளது தலையின்மேல்
அனைத்தும் மத்தாப்புகள்!

- அவள்
அதிசயப் பார்வையில்! - அதை
அன்றுதான் காண்கிறாள்!
பலபெருஞ் சூரியர் - கக்கும்
பெருநெருப்பு என்பதாய்....

காற்று மண்டலம் அது
காணும்ஓர் நீலமாய்...

அழகிய மீன்களே
அந்தரம் செல்வதாய்.....

இன்னிரா ஒளி எனும்
இனிமைசெய் போதையாய்...
தெளிந்த நீர்ப் பரப்பிலே
சேர்க்கும் விம்பங்களாய்....!

கப்பல் தீபங்களோ
கண்ணையே பறிப்பதாய் - அதில்
கயிறுகள் மட்டுமா? - மக்கள்
கூட்டமும் துலக்கமாய்....

## கடற்கன்னி பரவசம்!

- "ஆகா
இத்தனை எழில்மிகு
இளவர சனாஇவன்?" - கன்னி
இதயத்தே பரவசம்! - அங்கே
இசையுமே இனிப்பதாய்....

- அந்த
அரச குமாரனோ - அவர்கள்
அன்பினில் திளைப்பதாய் - கரம்
குலுக்கியே புன்னகை
காட்டும் ஓர் அழகனாய்....

# வைத்த கண் எடுத்திலாள்!

நாழிகை ஆனதே! - கடல்
நங்கையோ கப்பலில்
வைத்தகண் எடுத்திலாள் - அவள்
மனதினை நிறைத்தவன்

- அந்த
இராச குமாரனாம் - அவள்
இதயத்தை வருடலாய் - கடல்
கன்னியின் நாயகன் - எனும்
கற்பனை வளர்ப்பதாய்!

# எண்ணம் இசைக்கும் எதிர்வலைகள்!

- அங்கே
விளக்குகள் அணைந்தன. - வாண
வேடிக்கை நின்றது...
வேட்டுகள் ஓய்ந்தன! - அதிர்வு
அலைகள் ரீங்காரமாய்...

- அது
ஆழ்கடல் மீதிலே - இன்னும்
ஒலிக்குமோர் பிரமையாய் - அங்கே
ஆனவோர் அமைதியும் - எழில்
ஆக்குமாம் இனிமையாய்...

- கடற்
கன்னியோ அலைகளால் - மேல்
கீழ் என ஆடியே
கப்பலின் அறைவழி
கண்வைத்துப் பார்த்தனள்!

## சூறைக் காற்று!

அக்கப்பல் பாய்களோ
ஒவ்வொன்றாய் விரிந்தது! - ஆனால்
அக்கணம் அலைக்கடல் - பொங்கி
எழுந்ததாம் வேகமாய்...

கருமுகில் திரண்டு வான்
காட்சியை மாற்றலாய் - தொலை
மின்னல் வெட்டு ஓங்கியே
வானையே கிழிப்பதாய்...

- கால
நிலை அங்கு மாறிட - பெரும்
நெருக்கடி தோன்றிட - கப்பல்
ஓட்டிகள் பாய்களை - மீண்டும்
உருட்டினர் உசாரென...

- கப்பல்
தளும்பி அக் கடலிலே
தனைவிரைவு ஆக்கலாய்...

அங்கதன் நகர்வு எலாம்
அலைகளில் அலைவதாய்...

## கப்பல் முனகல்...

கருமலை பொங்கலாய் - அலை
கடிதினில் உயர்ந்தது - கொடிக்
கம்பங்கள் சுருட்டியே - கீழே
கப்பலை மடக்கலாய்...

- அந்த
கப்பலோ அன்னமாய்
கடலிடை ஆடியது - ஒரு
பேரலை மூழ்கியே - அது
புரட்சியாய் எழுந்தது....

- சின்னக்
கடற் கன்னிக்கோ அது
களிப்பினைச் சேர்த்தது - ஆனால்
கடலோடிக் கூட்டமோ
கடும் அச்சம் ஆகினர்!

கவலைக் குரலதே
'கிரீச்' எனும் முனகலாய் - கப்பல்
பிரளயக் கடலிடை - துயர்
பேசல்போல் இருந்தது.

# கப்பல் மூழ்கி...

அசுரக் காற்றடித்திட
அடித்தளம் குலைந்தது - கப்பல்
நீர் புகுந்து உயர்ந்தது - கொடிக்
கம்பம் ரண்டானது.

நீர்மட்டம் ஏறியது - கப்பல்
நிலை குலைந்து அமிழ்ந்தது! - அங்கே
அபயக் குரலுடன்
அலறுவோர் அவலமாய்....

- கப்பல்
தூண் மரக் கட்டைகள் - நீரில்
தெரிந்தன மிதப்பதாய்.... - கடற்
கன்னியோ தன்னையே - அங்கு
காத்திடும் நிலையிலே....!

அக்கணம் அங்கு இருள்
அனைத்தையும் மூடியது - அந்த
இருளையே கிழிப்பதாய்
எழுந்த ஓர் மின்னலே.....!

- அதில்
அவலமாய் அலறுவோர்
அனைவரும் தெரிந்தனர்! - சின்னக்
கடற் கன்னி நோக்கினள்! - இராச
குமாரனை அக்கணம்!

# ஆழ்கடல் நோக்கி அரச குமாரன்!

- அந்த
அரச குமாரனோ
ஆழ்கடல் மூழ்கிடும்
அந்தவோர் காட்சியால்
அவள் உள்ளம் மகிழ்ந்தது...

தன்னையே கவர்ந்தவன்
தன்னிடம் வருவதாய்...
ஆனவோர் எண்ணமும்
அக்கணம் மறைந்தது.

- "இந்த
மானிடர் வாழ்ந்திடார்
மாக்கடல் மூழ்கிடில்... எந்தன்
இராசகு மாரனும்
இறப்பது உறுதியே!

- அவனை
இறக்க நான் விட்டிடேன்! - அவன்
இன்னுயிர் காப்பனே!"
என்றவோர் சிந்தனை
அவளிலே எழுந்திட...

# கடற்கன்னி காத்தனள்!

- சின்னக்
கடற் கன்னி காற்று என
கடுகியே நீந்தினள் - மோதும்
கட்டைகள் தூண்களைக்
கடந்தனள், அவையெலாம்....

உடைந்து அங்கு மிதப்பவை - அதில்
ஒன்றிலே மோதிடில் - கன்னி
மாளும்ஓர் அபாயமே! - அதை
மனதிலே எண்ணிடாள்!

- புயல்
ஆழ்கடல் புகுந்து - எழுந்து
அலையிடைப் பரவியே
இறுதியில் அடைந்தனள்
இராச குமாரனை.....

- அவன்
நீந்தும் ஓர் இயக்கமே
நின்றவோர் நிலையிலே
கைகள்கால் சோர்விலே - அவன்
கண்களும் செருகியே!

- அந்தக்
கடற் கன்னிதாம் அங்கு
கிடைத்திடாது இருக்குமேல்

இளவலோ அக்கணம்
இறந்துதான் இருப்பனாம்.

## அலையின் இழுப்பிலே...

அன்னவன் தலைதனை
உயர்த்தினள் நீரின்மேல் - அவனோடு
ஒதுங்கும் ஓர் இடம்வரை - அலை
இழுப்பிலே மிதந்தனள்!

## காலைக் கடலிலே...

புயலதோ ஓய்ந்ததாய்
புலர்ந்த அக்காலையில் - கப்பல்
உடைந்த எத் துண்டுமே
எதிரிலே-தென்படா!

கதிரவன் வருங்கடல் - அதி
காலை அவ்வேளையில்
சிவந்தஓர் ஒளிச் சுடர்
சூடிய காட்சியாய்...

அரசகு மாரனின்
அழகிய முகத்திலே

அக்கதிர் பாய்ந்து அவன்
உயிர்ப்பினைப் பேசியது

# கடற்கன்னி தந்த முத்தம்!

- இன்னும்
மூடிய கண்ணனாய்!
மயக்கமே தெளிந்திலன்! - அந்த
அரசகு மாரனின்
அழகு முன் நெற்றியில்

- சின்னக்
கடற் கன்னி கொஞ்சினள்! - அந்தக்
கடல்அலை இழுப்பிலே - அவனைத்
தழுவியே செல்கையில் - அவன்
தலைமுடி கோதியே...

- "எந்தன்
கடலடித் தோட்டத்தின்
கவின்சிலை போல் அவன்!" - என்றே
களிப்புடன் கன்னிகை - மீண்டும்
கொஞ்சினள் இளவலை!

- அவன்
உயிர் பெறுவான் எனும்
உயிர்ப்பு அவள் பெற்றனள்!

அவ்விடச் சூழலை
அவள் கண்கள் அலசின.

## நிலனை நோக்கி...

கடற்கன்னி பார்வையில் - அதோ
கண்ணுக்குத் தெரிவதாய்
மணல்செறி உலர் நிலம்! - உயர்
மலைகளோ நீலமாய்....

- அதில்
அன்னங்கள் அமர்தலாய்
ஆகும் வெண் பனியதே!...
காடுசெய் அற்புதம்! - அந்தக்
கரைஎழில் பசுமையாய்...

## கட்டிடம் தெரிந்தது!

- அதோ
தெரியும் ஓர் கட்டிடம்! - கன்னி
தெளிவது கடினமே! - தேவன்
ஆலயம் என்பதா? - ஓர்
அம்பலம் ஆகுமா?

- அங்கு
தோட்டத்து மரங்களாய்
தோடை நாரத்தைகள்! - அங்கே
பனை இனம் போன்றவை - உயர்ந்து
படலைமுன் அசைவன!

கடல்தரை தொடும்இடம்! - ஆழம்
கண்டிடாக் குடாஎன - அங்கே
அமைதியைக் காட்டிடும் - ஆனால்
ஆழமே அவ்விடம்!

## மணலிலே கிடத்தினள்!

- கன்னி
பாறை முன் வெண்மணல்
பரப்பினைக் கண்டனள்! - நீந்தி
அரசகு மாரனை
அணைத்தங்கு சேர்ந்தனள்!

- அந்த
வெண்மணல் பரப்பிலே
வெதுப்பிடும் வெய்யிலில்
மயங்கியோன் உடலினை
வளர்த்தி அங்கு அமர்ந்தனள்!

## மங்கையர் வருகை!

- அந்த
வெள்ளைக் கட்டிடத்திலே
மணிஎலாம் ஒலித்தன!! - இள
மங்கையர் தோன்றினர்! - தோட்ட
வழிஅங்கு வந்தனர்!

## சின்னக் கடற்கன்னி மறைவு

எம்கடற் கன்னியோ
அவசர நீச்சலாய் - வந்து
நீளமாய் நீரின்மேல்
நீட்டு கல் இரண்டிடை....

- நின்று
தலைமுடி கழுத்தெலாம்
கடல்நுரை பூசினள்! - யாரும்
கண்டிடா வண்ணமாம்!
கோலம் என்று ஆகினள்!

- தன்றன்
அரச குமாரனை - யாரும்
அணுகுகின் றார்களா? - என
அவளது கண்களோ
அவ்விடம் நோக்கின!

## அதோ ஒருத்தி...

- அதோ
இளநங்கை ஒருத்தியே
அவ்விடம் வருகிறாள்! - அவள்
அதிசயப் பார்வையோ
அரசகு மாரனில்....

- அவள்
ஓடித்தான் செல்கிறாள்
அங்கு தான் கண்டதை
அனைவர்க்கும் கூறிட - அங்கே
அனைவரும் மொய்த்தனர்!

## அரசகுமாரன் புன்னகை!

- அங்கே
மயக்கமே தெளிந்தவன்
முகம்மலர்ப் புன்னகை! - அது
அவனையே சூழ்ந்துள்ளோர்
அனைவரை நோக்கியே!

## சின்னக் கடற்கன்னி வாட்டம்!

- சின்னக்
கடற்கன்னி திசையினைக்
கண்டொரு புன்னகை
சிந்திடா னா அவன்? - கன்னி
சோர்ந்துஅங்கு வாடினள்!

- அவன்
இன்னுயிர் மீட்டதே
இவள்என்று அறிந்திடா
இளவரசன் நிலை! - கன்னி
இதயமே நொந்தனள்!

## அவனை அழைத்து...

அங்குள்ளோர் அனைவரும்
அரசகு மாரனை
அங்குள்ள மண்டபம்
அழைத்துத்தான் போயினர்!

## சோகமாய் திரும்பினள்!

மாறிடாச் சோகமாய்
மனம்இருள் சூழ்ந்திட - கன்னி
மாக்கடல் புகுந்தனள்! - தந்தை
மாளிகை அடைந்தனள்!

## தவிப்பு!

- அவளில்
முன்புள்ள மென்மையும்
மூழ்கு சிந்தனையதும்
அமைதியைச் சூடலும் - இன்னும்
அதிகரித் திருந்ததாம்!

## காட்சிகள் சொல்லிடாள்!

-"நீ
கண்டே வந்ததை - நாம்
களிப்புற சொல்லிடு!" - எனும்
மூத்தோர் வார்த்தையை
வாங்கிடா மௌனியாய்....

எதையோ பறி கொடுத்து
இப்படி ஆனதாய்...

இடையிடை அவளது
இதயமே விம்முதே!

## அவனைத் தேடி...

அவன் உயிர் மீட்டிட
அடைந்த அவ் விடத்திடை - தினம்
காலையும் மாலையும் - எங்கள்
கடற்கன்னி அலைவளாம்!

- அங்கே
தோட்டத்து மரக்கனி
சேகரிப்பு ஆகலாய்....
உயர்ந்துள்ள மலைகளில்
உருகும் பனியதாய்....

அங்கவள் கண்டவை
அனைத்துமே களிப்பிடாது
அரச குமாரனை - அவள்
எங்குதான் தேடுவள்!

## தோட்டச் சிலை ஆறுதல்...

- அவள்
அளவிலாச் சோகமாய்
ஆழ்கடல் செல்லுவள் - தன்றன்
தோட்டத்து எழில்சிலை
தனைஅணைத்து ஆறுவள்!

துயருறு கன்னியை
சொல்லுமாம்! அங்கவள்
செப்பனே செய்திடா
தோட்டமும்!... அங்கெலாம்

மலர்களே கண்டிடாள்! - இருள்
மூடியே புதர்களாய் - அவை
வழியடைத்து அருகுள்ள
மரங்களைப் பிணைத்தலாய்..........

## மூத்தவர் அறிந்தனர்!

- கடற்
கன்னியாம் சிறியவள்
கடைசியில் தன்அகம்
உற்றவை அனைத்தையும் - ஓர்
அக்கைக்கே உரைத்தனள்!

அவள்கதை ஏனைய
அக்கையர்க்கு எட்டின! - கேட்ட
நெருங்கிய சேடியர் - அந்த
இரகசியம் காத்தனர்!

## சேடிக்கு தெரிந்தது...

- அந்த
அரச குமாரனை
அறிந்தவள் ஒருத்தியாய்
அங்கொரு சேடியும்
இருந்தனள் அவளுந்தான்...

கப்பல் மேல் விழாவினை
கண்டவள் ஆதலால்
எவ்விடத்திருந்து அவன்
அவ்விடம் வந்தவன்....

எங்கு அவன் நாடுளது
என்பதே அறிந்தவள்!
அத்தனை தகவலும்
அங்கவள் தந்தனள்!

## மூத்தோர் உதவி!

"வருத்தம் வேண்டாம்
வா தங்காய்!" என
அழைத்தனர் தமக்கையர்
அங்கு கை கோர்த்தனர்!

அரச குமாரனின்
அரண்மனை நோக்கியே
ஆழ்கடல் இருந்தே
அந்தரத் தெழுந்தனர்.

## அரசகுமாரன் அரண்மனை!

தேர்ந்தநற் கற்களே
துலங்கு ஒளி பேசிடும்! - அது
மங்கலம் உரைத்திடும்
மஞ்சள் அரண்மனை!

- அங்கு
சலவைக் கற்களே
செய்தன படிகளாய்...
அகன்ற அப் படிகளில்
ஒருதொடர் கடல்வரும்!

கூம்பகம் போல்அரண்
கோபுரம் அமைந்தது! - அங்கு

தூக்கியே நிறுத்திடும்
தூண்களும் எழில்சொலும்!

- அந்த
தூண்களுக்கு இடையிலே
தோன்றிடும் சிலைஎலாம்
நான்!.. நான்!.. என்றிடும்
நல்உயிர் தோற்றமாய்!
துலக்கம் சேர்த்திடும் - பெரும்
தூய கண்ணாடிசெய்
சாளரம் அனைத்துமே
சொல்லிடும் காட்சிகள்...

- உள்ளே
அறையலங் காரமே
ஆக்கிடும் பட்டுகள்!
விலைமதிப்பு அறியா - துணி
வகை தரம் உயர்ந்தவை!

சுவர்களே செய்திடும்
சித்திரப் படங்களாய்...
பார்ப்பவர் உள்ளமோ
பரவசம் ஆக்கிடும்!

செயற்கை நீரூற்று அது
சீறியே எழுந்துமேல்
கூரைக் கண்ணாடியின்
குழிவரை உயரும் ஓர்...

பெரு மண்டபம்அங்கே
பகலவன் கதிர்ஒளி! - அந்த
தண்ணீர், செடியெலாம் - அதில்
சிரித்துள்ளம் மலர்வதாய்...

## சின்னக் கடற்கன்னி துணிந்தனள்!

அவளையே கவர்ந்தவன்
அங்குதான் வாழ்கிறான்!
என்றவள் தெரிந்தனள்! - அங்கே
இராப்பகல் கழித்தனள்!

- அவள்
துணிச்சலே கொண்டனள்! - தரை
தொட்டிடும் நீர்வரை! - யாரும்
செல்லவே பயப்படும் - அந்தத்
தொடுகரை நீந்தினள்!

- அதோ
பளிங்குக் கல்லினால்
படைத்த மேல்மாடமே! - அதன்
கீழ் கால்வாய்வரை - கடல்
கன்னிகை வந்தனள்!

- அந்த
வாய்க்கால் நீர்அதில்
வடித்தஓர் சித்திரம்!

மேல்மாடத்தினை - நிழல்
வரைந்துள வண்ணமாய்...

அவ்விடம் அமர்ந்தவள்
அந்த மேல்மாடத்தில்
பால்நிலா ஒளியிலே
பார்த்தனள் அவனையே....

- அந்த
இராச குமாரனின்
எண்ணமோ தனிமையில்
தானே இருப்பதாய்! - அங்கே
யாருமே அற்றதாய்...

## உல்லாசப் படகிலே...

பதாகைகள் பறந்திட - உயர்
படகிருந்து இசைவர
இராசகு மாரனின்
உல்லாச மாலைகள்!

- கடல்
பாவையோ புல்லிடை
பதுங்கி அக்காட்சியை
கண்டு இன்புறுவளாம் - ஒரு
காட்சியும் சேர்ப்பளாம்!

## அன்னம் போல...

- நீண்ட
வெள்ளியாய் மறைப்பவள்
விசிடும் காற்றிலே! - அதைக்
காணுவோர்க்கு அவளது
காட்சியோ வேறெனும்!

- அது
பசும்புல் இடையிலே
பறக்கும்ஓர் அன்னமே
வெண்ணிறச் சிறக்கையை
விரித்தலாம் தோற்றமாய்!...

## ஊரார் புகழ்தல்....

- கடற்
கன்னியின் மனதினைக்
கவர்ந்த அக் காதலன்
எத்தனை நல்லவன்!
என்றுதான் பேசுவர்!

- இதை
விளக்குடன் வந்து இரா
மீன்பிடித் திடுபவர்
கடலிலே கதைப்பதை - கடற்
கன்னியே கேட்டனள்!

## இனிய நினைவுகள்!

- அன்று
பேரலை நடுவிலே - தான்
பெருமையாய் காத்ததை - அவன்
சூற்றுயிர் மீட்டதை - எண்ணி
குதூகலம் எய்துவள்!

- அன்று
அன்னவள் மார்பிலே - அவன்
அமைதியாய்ச் சாய்ந்ததும்
அழகிய முத்தமே
அங்கவள் ஈந்ததும்...

ஒன்றுமே தெரிந்திடா
இராச குமாரனாம்! - அவன்
கடற்கன்னி காதலைக்
கனவிலும் கண்டிடான்...!

## மனிதர் இனித்தனர்!

- இப்போ
கடற்கன்னி உளம் அதில்
கவின்மிகு மானிடர்!
எண்ணவே இனித்தனர்! - "எங்கள்
ஆழ்கடல் போலில்லார்!

இவர்களின் உலகமோ
எத்தனை பெரியது!" - இதைச்
சுற்றியே பார்ப்பதை - கடல்
சுந்தரி விரும்பினள்!

'கடலின்மேல் கப்பலில்
களிப்புடன் பறக்கிறார்
உயரவான் மலைகளில்
எப்படி ஏறு(கி)றார்!....

எத்தனை அதிசயம்
இந்தஓர் வையகம்!' - நிலன்
காடுகள் கழனிகள் - அவள்
கண்கொள்ள மறுப்பதாய்...

## கேள்விகள் எழுந்தன!

தோண்டும்எம் கன்னியில்
தேங்கிடும் கேள்விகள்! - அவள்
அக்கையர் விளக்கிடார் - அவை
அத்தனை கடினமே!

- அதனால்
முதியதன் பாட்டியை
முடிவிலே நாடினள்! - அந்த
பாட்டி, மேல் பூமியைப்
பற்றி நன்குஅறிவளாம்!

# பாட்டியின் விளக்கம்!

“ஆழியின் மேலுள்ள
அவைகளே நாடுகள்”
அருமையாம் விளக்கமே - பாட்டி
ஆங்கு இதைச் சொன்னது.

# மனிதருக்கு இறப்பு உள்ளதா?

-“அந்த
மனிதர்தம் வாழ்விலே
மரணிப்பு உள்ளதா? - நீரில்
மூழ்கிடாது இருந்திடில்
வாழ்வரா நீண்ட நாள்?

- எங்கள்
ஆழ்கடல் உலகுபோல்
அவர்களும் இறப்பரா?” - எனும்
சின்னவள் கேள்விக்கு - பாட்டி
சிந்துவள் விடை இது...

## மூந்நூறு ஆண்டுகள்!

“எங்களின் வாழ்வுபோல்
அங்கு அவர் இருந்திடார்! - நாங்கள்
முந்நூறு ஆண்டுகள்
வரை இங்கு வாழலாம்!”

## நிலைபெறா ஜீவன்!

இறுதியில் நாங்களோ
இறந்திடும் போதிலே - கடல்
மேற்பரப்பு அடைவமே! - நுரை
வடிவம்எம் தோற்றமாய்...

- எங்கள்
ஜீவனோ அழிந்திடும்!
அன்புளோர் அருகிலே
எந்த ஓர் சமாதியும்
எங்களுக்கு அற்றதாய்...

# மறுபிறப்பு இல்லை!

- இங்கே
வெட்டிய பாசியோ
மீண்டுமே பூத்திடா
வண்ணமாய் எமக்கெலாம்
மறுபிறப்பு இல்லையே!

# மானிடர் நித்திய ஜீவனில்!

- அங்கே
உள்ள அம் மானிடர்
அழிந்திடா ஆன்மமாய்!.... - உடல்
மண்ணுளே மறைந்தும்தான் - உயிர்
மறுபடி உய்வதாய்....

- அது
தெளிந்தநற் காற்றிலே
தொற்றிடும் மேல்செல்லும்! - ஒளிர்
வெள்ளி மண்டலம்வரை
விரைந்து அது உயர்ந்திடும்!

- நாங்கள்
ஆழ்கடல் ஏறியே - அவர்
உலகு அதைக் காணல்போல் - அந்த
மானிடர் ஆன்மமோ
மேலுமே உயருமாம்...

- இன்னும்
அற்புத உலகத்தை
அவர்கள்தான் எட்டுவர்!! - அதை
அறிந்திடோம் நாங்களும்!
யாருமே அறிந்திடார்!

## மானிடர் ஆக வழி?

“மானிடம் போல எம்
வாழ்வது ஏன்இல்லை? - நாம்
அழிந்திடா ஆன்மமாய்
ஆகிடாத் தன்மையேன்!?

- எனக்கு
நாள் ஒன்று போதுமே - மேல்
நிலத்தவர் ஆகி, வான்
ஏககுற்காக என் - நூறு
ஆண்டெல்லாம் அளிப்பனே!”

## பாட்டியின் சமாதானம்!

- சின்னப்
பெயர்த்தியின் வார்த்தையால்
பாட்டியோ விழித்தனள்! - கன்னி
மனதினில் எழுவதை
மாற்றிடச் சொல்லினள்!

- பாட்டி
"அங்குளோர் எண்ணமேன்?
இங்குளோர் நாங்களே
அங்கில்லா சிறப்புகள்
ஆனவர்" என்றனள்!

# நித்திய ஜீவன் ஆக வழி என்ன?

- "இந்த,
கடல்அலை ஓசையை
கவின்மிகு பூக்களை
சிவந்த சூரியனையும் - காணாச்
சாவு எமைச் சேருமா?

- ஒரு
கடலின்மேல் நுரை எனும்
கொடுநிலை தோன்றுமா? - நாங்கள்
அழிந்திடா ஆன்மமாய்
ஆவதற்கு எதுவழி?"

- என
அங்கலாய்ப்பு உற்றவட்கு
அந்த மூதாட்டியோ.... - "வழி
இல்லவே இல்லை" என்று
இயம்பினள் தொடர்ந்தனள்...

# கடற் கன்னியை மானிடன் நேசித்தால்...

“அந்த ஓர் பூமியின்
ஆடவன் தருவனே! - அவன்
உள்ளன்பு கொண்டு உன்னை
இதயத்தில் ஏற்றிடில்....

-நீ
உன்னை இங்கு ஈன்றவர் - கொண்ட
உரிமையில் விலகுவை
அவனது சொந்தமாய்
ஆகும்அப் போழ்திலே...

- அவன்
உந்தன்மீது அன்பினை
ஊற்றெனச் சொரி வனே!
மதகுரு முன்னர்தன்
வலக்கரம் தூக்கியே

- அதை
உன்கரம் மீதிலே
உரிமையாய் வைத்துஒரு
சத்தியம் தந்திட
சகலதும் மாறிடும்!

அவனது ஜீவனோ
உன்னுடல் புகுந்திடும்
மனிதரின் மகிழ்வெலாம்
வாய்க்குமாம் உனக்குமாய்...

- உந்தன்
உயிரிலே கலந்தவன் - அவன்
உறவிலோர் சங்கமம்
உனக்கொரு பரிசிடும்! - அது
எப்பவும் நிகழ்ந்திடாது.

## வாலும், காலும்!

- எங்கள்
அழகிய மீனின்வால் - அங்கே
அருவருப்பு என்குவர்! - எம்மை
விளங்கிடும் மகிமையோ - அந்த
மானிடர்க்கு இல்லையே!

அவலட் சணம்எனும்
இருசுமை தாங்கியே - அங்கே
அவர்களின் கால்களாம் - அது
உள்ளவர் அழகராம்!"

- பாட்டி
பேசியே ஓய்ந்தனள் - பெரு
மூச்சு தான்பிறந்தது... கடற்
கன்னிதன் வாலினைக்
கவலையாய்ப் பார்த்தனள்...

## கொண்டாடுவோம்!

- பாட்டி
"ஆனந்தம் எய்துவோம் - எங்கள்
ஆயுள் நாள் முழுவதும்!
ஆடி இன் புறுவமே! - பின்னர்
அமைதியாய் அடங்கலாம்!

இன்று நாம் மாலையை
இனிமையாய்க் களிக்கலாம்! - அதற்காய்
நாட்டிய அரங்கையே
நாடுவம்!" என்றனள்.

## நடன அரங்கிலே...

அகிலமே அறிந்திடாது!
ஆடல்செய் அரங்கது! - அதன்
சுவருடன் கூரையும்
துலங்கு கண்ணாடியாய்...

- அந்த
தடித்த கண்ணாடியோ
தான்எழில் சேர்ப்பதாய் - உள்ளே
கூடமே எங்கணும் - நிறக்
கலவையே ஒளிர்வதாய்...

- அவை
நெருப்பெனும் நீலமாய்! - இளஞ்
சிவப்புடன் பச்சையாய் - பல
நூறு சங்குகள்ஒளி - சுற்றி
தூறும்ஓர் வரிசையாய்...

- உள்ளே
கண்ணாடிச் சுவர்வழி
கரணமாய்ச் சுற்றிடும் - மீன்கள்
சின்னதும் பெரிதுமாய்! - அவை
செதில்களா? அற்புதம்!

அந்தக் கண்ணாடியும்
அழகினைக் கூட்டிடும் - அவை
சிவந்த நீலத்துடன்
சேரும் பொன் வெள்ளியாய்...

- அங்கே
ஆண்களும் பெண்களும்
ஆடினர்! பாடினர்!
மதுரமாம் குரல்அதன்
மகிமையோ மகிமையாம்!

அவர்கள் செய் இன்னிசைக்கு
ஒப்பிட யாருளர்?
எவருமே ஈடில்லை
எங்குமே என்பதாய்...

## சின்னக் கடற்கன்னி பாட்டு!

- சின்னக்
கடற்கன்னி பாடினள்! - எந்தக்
கல்லையும் கரைப்பதாய்! - அவள்
அனைவரை(யும்) முந்தினள்! - அந்த
அவைகவர்ந்து இழுத்தனள்!

ஆரவா ரத்தினால் - அவை
அதிர்ந்துதான் போனது - அங்கே
கரஒலி மட்டுமா? - வால்
கூடத்தான் ஒலித்தது!

## உலகை வென்றவள்!

- அந்த
ஆரவா ரங்களோ
அவள் திறன் ஓதிடும்! - அவளோடு
ஒப்பிட இங்கல்ல - மேல்
உலகிலும் இல்லையாய்...

# மீண்டும் அவள்!

- எங்கள்
கடற்கன்னி உள்ளமோ - அந்தக்
களிப்பிலே மிதந்தது! - அது
ஒருகணம் மட்டுமே! - மீண்டும்
அவள்முகம் வாடியது.

- அவளில்
இக்கணம் நின்றதோ - மேல்
உலகமே! அங்குவாழ் - இராச
குமாரனின் எழில்முகம்! - அதனால்
கேளிக்கை வெறுத்தது!

- அவனது
அழிவிலா ஜீவன்போல் - தான்
ஆகிடா தன்மையும்
அவளையே வருத்தியது... அங்கோ
ஆட்டமும் பாட்டுமாய்!....

அரங்கமோ மகிழ்ச்சியில்! - தந்தை
அரண்மனை நீங்கிய - கன்னி
தோட்டத்தில் சோகமாய் - வந்து
சிந்தனை மூழ்கினள்!

- அங்கே
குழல் ஒலி தவழலாய் - அந்த
கடல் இசை வடித்திட - அவள்

இதயத்தே பிறக்குமாம்!
இப்படிச் சிந்தனை.....

- மேலே

''என்உளம் நிறைந்தவர்!
அவரிடம் தஞ்சமாய் - என்னை
எந்தனை மகிழ்வுடன்
ஒப்படைத் திடுவனே!

அன்னவர் எங்களின் - மேல்
உலகிலே மிதக்கிறார்...
அவருடன் அங்குள்ள
அழிவிலா ஆன்மமும்...

என்னையே சேர்ந்திட
ஏற்றவோர் வழிபெற - எனக்கு
எத்தனை வருகினும் - அந்த
இடர்எலாம் தாங்குவேன்!

மூத்த அக்காள்களோ - அங்கே
மகிழ்ச்சியாய் ஆடுகிறார்! - எந்தன்
வாட்டத்தை மாற்றவே - இன்று
வழி ஒன்று காண்பனே....

## ஒரே வழி!

முன்பெலாம் நினைக்கையில் - எந்தன்
மனமெலாம் நடுங்கிடும் - அந்த
சூனியக் காரியை - இன்று
சந்திக்கச் செல்லுவேன்...

- எனக்கு
அவள்தரும் யோசனை
ஏதுமே உதவலாம்!" - என்று
துணிந்த அக் கன்னியோ - தன்றன்
தோட்டம்விட் டேகினள்!

## சூனியக் காரியை நோக்கி!

நுரைகளைக் கக்கிடும்
நீர்ச்சுழி கொண்டதே
சூனியக் காரியை
சேர்ந்திடும் வழி அது!....

அங்குஅப் பாதையை - கன்னி
அதற்குமுன் அறிந்திலாள் - கடல்
மலர்கள் புல் பூண்டில்லா - வெறும்.
மணல் செய்யும் சூனியம்!

- அது
நீண்டதாய் வந்து ஓர்
நீர்ச் சுழல் சேர்வதாய் - அங்கே
அனைத்தையும் வாரியே - நீர்
ஆழத்தில் சுருட்டலாய்...

- அந்த
நீர்ச் சுழி மத்தியே - கடல்
நங்கைசெல் பாதையாம்! - அவள்
சூனியக் காரியை
சேர்வழி வேறில்லை.

அச்சமே நிறைந்ததாய்
அடித்தங்கே மோதுநீர் - வெம்மை
ஆக்கும்அச் சேற்றினை - அவள்
அழைத்தனள் தரிசுஎன!

அவ்வழி கடந்திடில்
அதிசயக் காடுதான்!
அதனிடை இருந்ததே
சூனிய வீடுஅது!

# விசித்திர விலங்கு மரக்காடு!

- காட்டின்
புற்களும் மரங்களும்
பாதியே தோற்றமாய்...
மற்ற ஓர் பாதியில்
விலங்குகள் தோற்றமாய்...

- அவை
பாம்புகள் தலைகளே
பூமியில் நூறு என
நிறுத்திய வண்ணமாய்
நினைத்திடத் தோன்றின!

- அந்த
மரக்கிளை வடிவமோ
மெல்லிய கரங்களாய்... அதில்
விரல்களே புழுக்களாய்
வளைந்தங்கு நெளிவதாய்...

- அங்கு
வேரடி இருந்தே - நுனி
வரை செய்யும் அசைவுகள்!
படிப்படியாகவே - நீரில்
பற்றியே பிடிப்பதாய்...

பக்குவம் தேர்ந்தவை - அவை
பற்றிடும் எதனையும் - மீள

விட்டிடாது என்பதால் - கன்னி
மனப் பயம் உற்றனள்!

## திரும்பும் எண்ணம்!

அச்சத் தால் அவள்
இதயமே துடித்தது! - தந்தை
அரண்மனை திரும்பிடும்
எண்ணமும் வந்தது!

## இலட்சியத் துணிச்சல்!

- மீண்டும்
அரசகு மாரனும்
அழிவிலா ஆன்மமும்
அவளுள்ளத் தெழுந்திட
அப்பயம் விலகியது.

- அவள்
நீரிலே அலைந்த, தன்
நீள்முடி வாரினள்! - ஒரு
கொண்டையாய் சுற்றியே
கட்டினள் தலையிலே...

- அந்த
விசித்திர விலங்குகள்
வலையிலே சிக்கிடா
வகையில்தன் கைகளை
மார்புடன் கோர்த்தனள்....

- அந்த
விசித்திர விலங்குகள் - கொடும்
வளைகரம் பற்றிடா
வண்ணமே பாய்ந்தனள்
மீன்அதன் விரைவுடன்...

## பயங்கரப் பிடியிலே...

- அந்தப்
பிராணிகள் கைகளில்
பார்த்தனள் எலும்புகள்!
வெண்மையாய், அவையெலாம்
மரணம்முன் எய்தியோர்!

- அங்கே
உடைந்துதான் மூழ்கிய - கப்பல்
துடுப்புகள் பெட்டிகள் - அதை
இறுகவே பற்றிய
அக்கொடுங் கரங்களில்...

கடலின்மேல் நிலம்அதில்
காண்விலங்கு எலும்புகள்! - ஒரு
கடலில்வாழ் கன்னியும் - அந்தக்
கொடியவை பற்றியே...

- அவளின்
கழுத்ததை நெரித்தே
கொன்றவோர் கோரமாய்! - அது
கடும் அச்சம் ஆக்கியது - இராச
கன்னிகைக்கு அக்கணம்!

## சூனியக்காரி வீடு!

காட்டு நடுவையே - கடற்
கன்னியும் நெருங்கினள் - புதைச்
சேற்று நிலம் அதில்
கருண்டே கிடந்தவை....

வெளிறிய மஞ்சள்
வர்ணமே கொண்டவை! - அவை
அருவருப்பு ஊட்டிடும்! - பாம்பு
இனங்களே! கொளுத்தவை!...

- கப்பல்
மூழ்கியே இறந்தவர்
வெள்ளை எலும்பினால் - அந்தச்

சேற்று நிலத்திலே
செய்த ஓர் வீட்டிலே....

- ஒரு
பாடும் மஞ்சள்
பறவையாம் கானரி! - தன்றன்
குஞ்சுக்(கு) உணவை
கொடுப்பது போல்வதாய்...

- அங்கு
சூனியக் காரியோ
தனது வாய் கொண்டு ஒரு
தவளைக்கு உணவை
தந்தனள் ஆசையாய்.....

அருவருப்பு ஊட்டும்
அப்பெரும் பாம்புகள்
அந்தச் சூனிய
உடல்எலாம் ஊர்ந்தது!

- பாம்பின்
அருவருப்பே தன்றன்
ஆசைசொல் சூனியம் - அதை
"எந்தன் கோழிக்
குஞ்சுகள்!" என்றனள்....

# சூனிய வார்த்தைகள்!

"உன்னுள்ளம் உள்ளதை
உள்ளவாறு உரைப்பனே!
பேசிட வேண்டாம் - கடல்
பேதையே கேட்டிடு!

அதனால் உனக்கோ
அதிகமாய் துயர்வரும்!
எழிலது கொண்ட
இராச குமாரியே!

- உந்தன்
மீன்வால் நீங்கியே - அந்த
மானிடர் போலவே
இருகூமை தாங்கியை
ஆக்க நீ விரும்புவாய்!

அதனைநீ பெற்றிடில்
அரசகு மாரனும் - அழிவு
இல்லா ஆன்மமும் - உனக்கு
ஆகுமென்று எண்ணு(கி)றாய்..."

- என்று
சொல்லிய அந்தச்
சூனியக் காரியோ
இடியாய் ஏற்றிடா
ஒசையாய் சிரித்தனள்!....

- அவள்
சிரிப்பால் சிதறின!
தவளை பாம்புகள்எல்லாம்! - அவை
விழுந்தன கீழே - அந்த
வழி எங்கும் ஊர்ந்தன!

## கூனியக்காரி தொடர்ந்தாள்...

-"நீ
என்னிடம் வந்துள்ள
இந்தஓர் வேளையே
ஏற்றதாம்!, நாளையோ
சூரியன் உதித்தபின்....

ஓராண்டு அதுவரை - என்னால்
ஒன்றுமே இயன்றிடாது
இக்கணம் உனக்குநான்
உரைப்பதைக் கேட்டிடு!..."

## குடினீ

"உந்தனுக் காகவே
உட்கொள்ளும் குடினியை
உருவாக்கிடுவனே!
அதனையே எடுத்துநீ

- நாளை
சூரியன் உதிக்குமுன் - நீந்தி
சேர்ந்திடு மேல்நிலம்! - அங்கே
அமர்ந்திதைப் பருகிடு!
உந்தன்வால் சுருங்கிடும்..."

## மனிதர்போல் கால்கள்!

பூமியில் உள்ளவர்
பேசிடும் வண்ணமாய் - அவர்
கால்கள்போல் உனக்குமே! - கடற்
கன்னிநீ கேட்டிடு...

## வேதனைக் கால்கள்!

- "உன்னில்
தோன்றிடும் கால்களோ
துன்பமே செய்திடும்! - அதன்
வேதனை கூர்மையாம் - கத்தி
வெட்டிய போல்வதாய்..."

# பேரழகி!

- உன்னைப்
பார்த்திடும் மானிடர் - உன்போல்
பார்த்திடா வண்ணமாய்
பேரழகு ஆனவள்! - என்றே
புகழுவார் உன்னையே!

- உந்தன்
மென்மையாம் நடையினை
மங்கையே பேணுவாய்!...
உன்னைப்போல் நாட்டியம்
ஆடிடார் அங்குளோர்!

- உந்தன்
பாதமோ பூமியில்
படுகிற வேளையில்
கூரிய கத்தியே
கிழிப்பது போல்வதாய்...

இரத்தமே கொட்டுவது
ஒக்குமாம் வேதனை - அந்தத்
துன்பமே தாங்கிடில்
தருவன் என் உதவியே!

## கடற்கன்னி சம்மதம்!

தடுமாற்றம் தரும்
தளம்பல் குரலுடன் - கன்னி
சரிஎனத் தன்றன்
சம்மதம் சொல்லினள்!

- அது
அரசகு மாரனோடு
அழிந்திடா ஆன்மா - எனும்
இரண்டுமே அவளது
இதயத்தில் நின்றதால்...

## சூனியக்காரியின் நிபந்தனை!

சூனியக் காரியோ
தொடர்ந்தே கூறினள்...
''மனிதரைப் போலநீ
மாறிடின் உந்தனின்

கடற்கன்னி வடிவமே
கிடைத்திடாது மீளவும்! - நீ
அக்கையர் காணவோ - தந்தை
மாளிகை சேரவோ

- கடல்
நீரின் வழியினை
நினைக்கவே முடிந்திடாது... அந்த
அரசகு மாரனின்
அன்பைப் பெறாவிடில்...

- தன்னை
ஈன்றவர் மறந்து - உன்னை
அடையும் ஓர் மார்க்கமாய் - மத
குருவினுக்கு உறுதியை
கொடுத்து உன் கரத்தினை

- அவன்
பற்றிடத் தவறிடின் - யாவும்
பயன் அற்றுப் போய்விடும்! - நீயோ
அழிவில்லா ஜீவனை
அடைந்திட முடியாது...

- அந்த
இராசகு மாரனோ
இன்னொரு பெண்ணையே
மணமது புரிந்திடும்
மறுநாட்காலை உன்,

இதயம் வெடித்திடும்
இறந்துநீ கடலின்மேல்
நுரைஎன மாறுவாய்
நினைவில்கொள்" என்றனள்...

# கட்டுப்பட்டாள்!

- கன்னி
"அதைநான் ஏற்கிறேன்!"
என்றே சொல்லினள். - ஆனால்
மரண பயம்அவள்
முகத்திலே தெரிந்தது.

# சூனியக் காரியின் கூலி!

உன்னைநான் மாற்றிட
அறவிடும் கூலியை
அற்பமாய் இங்குநீ
எண்ணிவிடாதே...

- உனக்காய்
ஆக்கிடும் குடிநீர்
அதிகம் விலைபெறும்! - அதை
உன்னிடம் அறவிட
ஒருவழி உள்ளது.

# இனிய குரலைக் கொடு!

சிறந்துள்ள ஒருபொருள் - உன்னில்
தேர்ந்துள்ளேன் கேட்டிடு!

கடலடி மாந்தரின்
குரல்களில் உன்னதே...

- மிக
இனியதாம்!.. மேலுள்ள
இராச குமாரனை
உன்வசம் ஆக்கலாம்!
உன்குரல் கொண்டுஎன...

எண்ணியே இருக்கிறாய்...! - ஆனால்
உனது இன் குரல்அதை
எனக்கிட வேண்டுமே!-
அதுஎந்தன் கூலியே!

- எந்தன்
குருதியைக் கொடுத்தே - நான்
குறிப்பிடும் குடிநீர் - இரு
கூர்முனைக் கத்தியாய்
கடும்சக்தி ஆக்குவேன்.

## சின்னக் கடற்கன்னி அதிர்ச்சி!

"என்குரல் உங்களுக்கு
என்றதும் என்னிடம்
என்னதான் மீதியோ?" - கன்னி
ஏங்கியே கேட்டனள்....

# போதுமே பேரழகு!

-"நீ
ஒப்பிட கிட்டிடா
ஓவியம் போன்றவள்! - உந்தன்
நடையழகு அற்புதம் - இரு
நயனமும் பேசுமே!

- அந்த
மனிதரின் மனம்அது
வசீகரம் ஏற்றிட
உன்னிவை போதுமே - என்ன
உன்மனம் சோர்ந்ததா?"

# நாக்கை நீட்டு!

"உன்சிறு நாக்கினை
எந்தனின் கூலிக்காய்
வெட்டிடப் போகிறேன்
வெளிஅதை நீட்டிடு...!"

# குடினீ தயாரித்தாள்!

- சூனியம்

குடினீக் காகவே
அடுக்குகள் செய்தனள்... ஒரு
அண்டா தூக்கினள் - அதன்
அழுக்குகள் நீக்கலாய்...

"சுத்தம் செய்தலே - முதல்
சிறந்தது!" என்றனள்! - பிணைத்த
பாம்புகள் கட்டினால் - அண்டாப்
பரப்பினைத் தேய்த்தனள்...

- தன்றன்
தோலினைச் சொறிந்தனள்!
சிந்திடும் குருதியோ
கறுப்பாய் தோன்றியது! - அதை
குண்டான் உட்புறம்...

வடியச் செய்தனள் - அங்கு
கொதிக்கும் நீர்என! - அதில்
கிளம்பும் விசித்திரக்
காட்சியோ அச்சமாம்...

அடிக்கடி சூனியம்
அந்த அண்டாவிலே
ஏதோ பொருட்களை
இட்டவா றிருந்தனள்...

கொதித்தே முடிந்தபின் - அழும்
குரல்அதில் ஒலித்தது... பின்னர்
அந்தக் குடினியோ - தூய
நீர்எனத் துலங்கியது.

- அதை
"எடுத்துக் கொள்" என - அந்தச்
சூனியக் காரியோ - சொல்லி
சின்னக் கடற்கன்னி - நாக்கை
துண்டித்து விட்டனள்....

## ஊமையானாள்!

- சின்னக்
கடற்கன்னி இனிஎலாம்
கதைத்திடமாட்டாள்! - பாடும்
இன்குரல் இழந்தவள்! - இனி
ஊமை வடிவமே!

## திரும்பினாள்!

தந்தையின் அரண்மனைத்
தீபங்கள் அணைந்ததால் - அவர்கள்
உறங்கிடும் நேரமே
உணர்ந்தனள் கன்னிகை!

அங்குதான் போவதா?
என்றவள் தயங்கினள் - இப்போ
கதைக்கவே முடிந்திடா - கடற்
கன்னி ஓர் ஊமையே...!

## பிறந்தகப் பிரிவின் ஏக்கம்!

அவளது உறவுகள்!
இனி எங்கு வாய்க்குமோ? - அவர்களை
நிரந்தரமாய் விட்டே
நீங்கிடப் போகிறாள்...

இந்தஓர் நினைப்பினால்
இதயமே வெடிப்பதாய் - கன்னி
துயரமே சூழ்ந்திட - தங்கள்
தோட்டத்தைச் சேர்ந்தனள்!

## அவர்கள் நினைவுக்காக...

- தன்றன்

மூத்த தமக்கையர் - செய்த
மலர்ப் படுக்கைதனில் - அவர்கள்
பாச நினைவுக்காய்
பறித்தனள் மலர்களை!

- கன்னி
பிறந்த அரண்மனை - அதை
பாசமாய்ப் பார்த்தனள்! - அதற்கு
முத்தம் ஆயிரம் - தந்து
மேல்கடல் கிளம்பினள்!

## அரச குமாரனிடம்...

- இப்போ
அரசகு மாரனின்
அரண்மனை அடைந்தனள்.
கதிரவன்தன் ஒளி - இன்னும்
கண்டிடா நேரமே!

- அவள்
பளிங்குக் கல்லினால் - ஆன
படிக்கட்டில் ஏறினள்! - வானில்
பால்நிலா நன்குதாம்
பளிச் எனத் துலங்கவே.

## குடிநீ குடித்தாள்!

- அங்கே
கொதித்திடும் குடிநியை - எங்கள்
கடற்கன்னி குடித்தனள்! - அவள்

மென்மையாம் உடல்தனை - அது
வெட்டியே செல்வதாய்...
- இரு
பக்கமே கூர்மையாம் - கத்தி
பொட்டெனப் புகுந்ததாய்! - அந்த
வேதனை தாங்கிடாள் - கன்னி
மரணமே தோற்றமாய்...

## மயங்கியோள் விழித்தனள்!

மயக்கங் கொண்டவள்
வீழ்ந்தே கிடந்தனள் - அவள்
விழித்த அப்போதிலே - கடல்
கதிரவன் காட்சியாய்!

## அரசகுமாரனே!

- அங்கே
இளமையாம் அழகுடன்
அவள்முன்னே நின்றவன்
இனியதாம் கருவிழி
இராச குமாரனே!

# இருவரின் கண்களும், வெள்ளைக் கால்களும்!

- அவன்
பார்வையோ அவளிலே - அவள்
பார்வையும் தாழ்ந்தது! - தன்றன்
மீனின் வால் இடத்திலே - இரு
வெண் நிறக் கால்களே!

இருப்பதை அக்கணம்
அங்கவள் புரிந்தனள்!
உடைமறைப்பு அறிந்திடா - அவள்
அம்மணத் தோற்றத்தை...

- தலை
முடிஅதன் நீளத்தால்
மூடியே கிடந்தனள்!
பார்ப்பவர் எவர்க்குமோ - அவள்
புலப்படா மர்மமாய்...

- அந்த
அரசகு மாரனும்
"எப்படி இங்குநீ?"
என்றுதான் வினவினான் - அவள்
எப்படிப் பேசுவாள்?

- அந்தப்
பேசவே முடிந்திடா
பெருந்துயர்ச் செல்வியோ - எழில்
நீலமாம் கண்களால் - அவனை
நோக்கினள் மென்மையாய்...

- அவன்
தன்கரம் கொடுத்தனன்! - அவளைத்
தூக்கியே நிறுத்தினன்! - தங்கள்
அரண்மனைக்கு அவளையே
இட்டனன் தாங்கலாய்.....!

## வலி நடை!

- அந்த
சூனியக் காரி
சொல்லிய படியே - சின்னக்
கடற் கன்னி நடக்கையில்
கடும் வலி கண்டனள்!

- அவள்
காலடி வைக்கையில்
கூரிய கத்தியோ
ஊசியோ பாய்வதாய்
அவ்வலி சேர்த்தது!

- இருந்தும்
அவ்வலி மறந்தவள்
அவன்மகிழ் வாகினள்! - அவன்
வலப்புறம் நடந்தவள் - ஓர்
வழலைக் குமிழியே...

## அரசகுமாரன் மகிழ்ச்சி!

அவள்அருகு இனித்தது! - அந்த
அரச குமாரனும் - அந்த
அதிசய நங்கையோடு
ஆவலாய் நடந்தனன்!

## அரண்மனை அழகி!

- அந்த
அரண்மனைக்குள் அவள்
உயர்ந்தநல் ஆடைகள்
அணிந்தனள், அனைவரில் - அவள்
அழகிலே சிறந்தவள்!
- இருந்தும்
கதைத்திட முடியாக்
கன்னி ஓர் ஊமையே!
அக்குறை ஒன்றுதான்
அவளிலே இருந்தது!

## அவையிலே நடனம்!

அரசகுமாரனும் - தன்றன்
அரச பெற்றோருடன்
அமர்ந்தஅவ் அவையதில்
அவர்கள்முன் தோன்றினர்!

அணி அலங்காரமாய்
அழகிய அடிமையர்! - அங்கே
பாட்டுகள் பாடினர் - ஒரு
பாவையின் பாடலால்,

- அந்த
அரச குமாரனும்
இனிய புன்னகையுடன்
கரவொலி புரிந்தனன் - அதை
கடற் கன்னி கண்டதும்...

- தான்
அவள் குரல்தனைவிட
அழகுடன் பாடிடும்
முன்னைய நினைவிலே
மூழ்கினள் சோகமாய்...

“என்றும் அவனுடன்
இருப்பதற்காகவே
எந்தன் குரல்தனை
இழந்தேன் என்பதை

அரச குமாரனுக்கு
எப்படி உணர்த்துவேன்?”
என்பதாய் ஆனதாம்
அங்கவள் சிந்தனை!

# சின்னக் கடற்கன்னி நடனம்!

இன்னிசைக்கு ஏற்ப
அடிமையர் ஆடினர்! - அந்த
ஆட்டத்தில் கடற்கன்னி
இணைந்திடச் சென்றனள்

- தன்றன்
வெள்ளைக் கரங்களை
மேலே தூக்கியே - கால்
விரல் நுனி நின்றே
விநோதமாய் ஆடினள்!

அரங்கதில் சுழன்றே
ஆடிடும் அவளது
அசைவுகள் அனைத்துமே
அற்புதம்! அற்புதம்!!

எழில் மிகு அசைவுகள்! - அவள்
விழிகளில் வார்த்தைகள்! - அது
அடிமையர் தனைவிட - அங்கு
உயிர்த்துடிப் பானதாம்!

அவையினர் மகிழ்ந்தனர் - "யாரும்,
அற்றவள் ஆனஎன்
சின்ன அனாதை!" என்று - அவளை
செல்லமாய் அழைத்திடும் -

- அந்த
அரச குமாரனும் - அங்கு
அடங்கிடா ஆவலாய்
அவளையே ரசித்தனன்!
அகமகிழ் வாகினன்!

ஒவ்வொரு தடவையும்
அவள் தடம் பதிக்கையில் - கத்தி
முனையே அறுப்பதாய் - பெரு
வலியினால் துடித்தனள்!

"என்றும் என்னுடன்
இருப்பான் என்னவன்!"
என்ற நினைவதே
அவள் வலி மாற்றிடும்.

## அவன் அருகிலே...

- அவள்
எப்பொழு தும் தன்
அருகிலே இருந்திடும்
உரிமையை வழங்கினன்!
இராச குமாரனே!

- அவன்
உறங்கும் பள்ளி
அறையதன் வாயில்
கதவுமுன் உள்ளவோர்
கம்பளி அணையினை..

- சின்னக்
கடற் கன்னி தேர்ந்தனள்!
களிப்புடன் அவனது
அருகில்தான் துயில்வதால்
ஆனந்தம் ஆகினள்!

## இருவரும் சவாரி!

- அந்த
அரச குமாரனும் - அவள்
அணிந்திட, சேவகர்
சீருடை வழங்கினன் - தன்பின்
சவாரிக்கு அழைத்தனன்!

அவர்களைச் சுமந்திடும்
அந்தக் குதிரையோ - பசும்
காடுஎலாம் அளக்குமாம்! - மரக்
கிளைகள் தோள் வருடலாய்...

- அங்கே
புத்திளம் அரும்பு இலை - பின்னால்
புள்ளினம் பாடுமாம்!
அவர்களின் சவாரியோ
எங்குமே தொடர்ந்ததாம்!

## வேதனை இன்பமாய்...

- அவள்
அரசகு மாரனோடு
அங்குள்ள உயர்மலை
உச்சிக்கே ஏறினள்!
ஐயகோ அவளது

மென்மையாம் பாதத்தால்
வழிந்ததாம் குருதியே - அவன்
அருகிலே என்பதால் - கன்னி
அனைத்தையும் மறந்தனள்!

- அங்கே
பறவைக் கூட்டமே - தூரப்
பயணமே போவதாய்
வான்முகில் கூட்டமோ - கீழே
வழங்குமாம் காட்சியே!

## உறங்காத கண்கள்!

- அந்த
அரண்மனை தன்னிலே
அனைவரும் உறங்கிட! - அங்கு
அவள்கண் உறங்கிடாது
அவள் எழுந்தேகுவள்...

- அந்த
பளிங்குப் படிவழி - கடல்
பாதத்தை நனைத்திட
இறங்கிச் சேருவள் - பாத
எரிவுகள் சுகம்தரும்!

- அந்த
ஆழ்கடல் வாழ்ந்திடும் - அவள்
உறவினர் நினைவுகள்!
ஏக்கமாய் அக்கணம்
அவளுளே எழுந்திடும்.

## அதோ, அக்காள்மார்!

ஒருபொழுது இரவிலே - கன்னி
அவ்விடம் நிற்கையில் - கரம்
கோர்த்துஅவள் தமக்கைகள்
கடலின்மேல் எழுந்தனர்!

- ஒரு
சோக கீதமே - அந்த
சோதரர் இசைத்தனர்! - கன்னி
தான் அங்கு நிற்பதை - தன்றன்
தமக்கையர்க்கு உணர்த்தினள்!

- அந்த
அக்காள் மார்களோ
ஆனந்தம் ஆகினர்!

அவள் பிரிவே தம்
அவலமென்று ஓதினர்!

அதன்பின் ஆனதாம்
இரவுகள் அனைத்திலும்
அக்காள் மாருடன்
அவள் சந்திப்புகள்!

## தந்தையும், பாட்டியும்!

- அங்கே
ஒருமுறை கண்டனள்
அதிகம் தொலைவிலே
அவளது பாட்டியும் - கடல்
அரசனும் மகுடமாய்!

அவர்களைக் கண்டுதான்
எத்தனை காலமோ?
பாசமாய் ஏக்கமாய்
பார்த்தனள் கன்னிகை!

- அவர்கள்
அவளை நோக்கியே
அசைத்தனர் கரங்களை! - அவர்கள்
அக்காள்மார்கள் போல்
அருகிலே வந்திடார்!

# அரசகுமாரன் உறவு!

அரச குமாரனோ
அவளின் மீதிலே
அளவுக் கதிகமாய்
அன்பினைச் சொரிந்தனன்!

பாலகர் மீதிலே
பாசம் சிந்தலாய்
அவனது பாசம்
அவளிலே அமைந்தது.

- அவளை
மனைவியென்று ஆக்கிடும்
மனநிலை பெற்றிலான்! - என்றும்
நித்திய ஜீவனாய் - அவள்
நிலைபெற வேண்டிடின்...

அவர்கள் திருமணம்
ஆவதே மார்க்கமாம்! - அந்த
திருமணம் இல்லையேல் - கடல்
நுரைஎனும் அழிவுதான்!

## முத்தம்!

அரச குமாரனோ - கரம்
அவளுடன் கோர்த்தனன்! - அவள்
வெண்நெற்றியில் ஒரு
முத்தமே ஈந்தனன்.

## அவள் கண்கள் கேட்டன!

“மற்றவ ரைவிட - உங்கள்
மனிதினில் பேரிடம்
எனக்கே ஆனதாய்
ஆக்கி உள்ளீர்களா?”

என்ற வினாவதே
அங்கவள் கண்களில்! - “ஆம்
எந்தன் அன்பே!
என்றும் நீ என்னவள்!”

## பரிசுத்த அன்பினள்!

- அவன்
பரவசம் எய்தியே
பகர்ந்தனன், தொடர்ந்தனன்!
“பரிசுத்த அன்பையே
பார்க்கிறேன் உன்னிலே...

உன்னோடு ஒப்பிட
உவமையேது உலகிலே! - அந்த
நல்லவோர் நங்கையின்
நினைவுகள் தந்துளாய்!...”

- எனப்
பகர்ந்தவன் இதயமோ - ஒரு
பரவசம் எய்தலாய்...! - எழும்
அந்தநாள் நினைவதை - அங்கே
அப்படி மொழிந்தனன்....

## யாரோ ஒருத்தி காத்ததாய்...

- “அன்று
கப்பல் பயணத்தில் - புயல்
கடலிலே மூழ்கினேன்!
அலைகளே தள்ளிட - ஒரு
ஆலயம் ஒதுங்கினேன்.

- அங்கு
ஊழியம் செய்திடும்
இளமைகொள் கன்னியர்!
அவர்களில் இளையவள்
என்னுயிர் மீட்டனள்!

- அவள்
இந்தவோர் உலகிலே
என்னன்புக் குரியவள்! - அவளை
இருமுறை மட்டுமே
இதுவரை பார்த்துள்ளேன்!

- அவள்
புனிததே வாலயம்
பணிபுரி கன்னிகை! - அந்த
எழிலிஉன் போன்றவள்!
என்றும்நீ என்னவள்!!

## நல்ல வேளை!

"நல்லவோர் நேரமே
நானுனைக் கண்டது! - என்றும்
இணை பிரியாததே
எங்களின் உறவிது!...."

## அவனைக் காத்தவள்..

உரைத்தவன் ஓய்ந்தனன்! - கன்னி
உள்ளமோ தவித்தது! - அவன்
உயிரைத் தான் மீட்டதை - அங்கு
உணர்த்திடா கொடுமையாய்...

# அந்த நினைவுகள்!

அந்தநாள் சம்பவம்
அவளுளே புகுந்தது - "அன்று
நீரிலே மூழ்கியே
நினைவின்றிப் போனவன்...

- அவனை
தேவா லயக்கரை
சேர்த்தவள் நானன்றோ!" - நான்
கடல்நுரை பூசியே - மறைந்து
கரையிலே அவனிடம்...

நெருங்கிய அவர்களை
நோக்கினேன் அல்லவா?
என்னிலும் அழகியாய்
அரச குமாரனைக்

கவர்ந்தஅக் கன்னியை - எந்தன்
கண்களால் பார்த்தனே!"
இதையெலாம் எண்ணிய
எம்கடற் கன்னிகைக்கு...

## அழமுடியாது!

பெருமூச் சொன்றுதான்
பிறந்தது அக்கணம்!
அழுதிடும் நிலையதோ
அங்கவட்கு இல்லையே!

## நிம்மதி!

"அவருளம் கவர்ந்தவள் - எங்கோ
ஆலயம் சேர்ந்தவள்!
ஆகையால் அவர்களோ
இணைந்திடார் என்பதால்...

என்னவர் அருகிலே
என்றும்நான் இருப்பனே!
அன்னவர் மீது என்
அன்பெலாம் சொரிவனே!

அவர்பணி செய்துஎன்
அகமெலாம் குளிர்வனே!
அவருக்கே என்உயிர்!" - என
ஆறினள் கன்னிகை!

# திருமணப் பெண் தேர!

"அயல்நாட் டரசனின்
அழகிய நங்கையாம்! - இந்த
அரசன்தன் மைந்தனுக்கு
அவளைப் பெண் பார்க்கவாம்!

- அந்த
பயணத்திற்கு ஏற்றதாய்
பகட்டுடன் கூடிய - எழில்
கப்பல் அங்கானதாம்!" - செய்தி
கடற் கன்னி காதிலும்!

- அந்த
பக்கத்து நாட்டதன் - வளம்
பார்த்திடும் பயணமாய் - சொல்லும்
அவர்களின் உள்ளத்தே
இருந்ததந் நோக்கமாம்!

- பெரும்
பரிவா ரங்களும் - அங்கு
பயணிக்க இருந்ததாம்! - கடல்
செல்வியோ மகிழ்வுடன்
தன்தலை ஆட்டினள்!

# அரச குமாரனைப் புரிந்தவள்!

அங்குள்ள அனைவரில்
அரச குமாரனின்
உள்ளமே புரிந்தவள்
எம்கடற் கன்னியாம்!

# அவளிடம் அவன்!

- சின்னக்
கடற் கன்னி நோக்கியே - இராச
குமாரனே கூறுவன்! - "எந்தன்
பயணத்தின் நோக்கில்என்
பெற்றவர் ஆவலோ.......

- அயல்
நாட்டு இளவரசியை
நான்கைப் பிடிப்பதாய்...!" - ஆனால்
என்விருப்பு இல்லையேல் - அதை
என்பெற்றோர் செய்திடார்.

-"என்னைக்,
கவர்ந்தவள், கடற்கரைக்
கோயிலில் கண்டவள்
என்னையே காத்தவள்
உன்எழில் போன்றவள்!

எனக்கொரு திருமணம்
என்றிடில் என்னவள்
போலவே தோன்றிடும்
பாவைநீ என்கிறேன்!"

என்றங்கே கூறிய
இராசகு மாரனோ - அவள்
செவ்விதழ் மீதிலே
தந்தனன் முத்தமே!...

- அவளின்
நீண்ட அக் கூந்தலை
நீவியே மகிழ்ந்தனன்! - அவன்
அருகுடன் அழிந்திடா
ஆன்மம்அங்கு அவள்கனா!

# புறப்பாடு!

- அவர்கள்
அயல்நா டேகிட - நிற்கும்
அழகிய கப்பலில்! - அப்போது
அரச குமாரனோ
அவள்விழி நோக்கியே....

- எந்தன்
ஊமைப் பிள்ளையே - பயம்
உள்ளதா உனக்கிது? - என்றே
ஆழ்கடல் பயணத்தை
அவளிடம் வினவினன்.

# ஆழ்கடல் விளக்கம்!

- கடலின்
அசுரக் காற்றை
ஆங்கெழும் அமைதியை
அடிக்கடல் வாழும்
அற்புத மீன்களை!

- அவை
அனைத்தையும் அறிந்த தம்
ஆழ்கட லோடிகள்
அறையும் வார்த்தையை - அவன்
அவளிடம் சொல்லினன்!

## கிணற்றுத் தவளை!

ஆழ்கடல் வளப்பம்
அறிந்த அக் கன்னியோ - அவன்
சொன்னதைக் கேட்டே
சிந்தினள் புன்னகை!

## உறங்காத கண்கள்...

- கப்பல்
சுக்கான் பிடிப்பவர்
தவிரஅங்கு அனைவரும்
உறங்கிக் கிடக்கிறார்! - மேலே
ஆகாயம் தெளிவுஎன...

முழுமதி காட்டிடும்! - கடல்
தெளிந்தநீர் ஆனதாய்!.... கடற்
செல்வியோ உறங்கிடாள்! - கப்பல்
தடுப்பிடும் விழிம்பிலே...

## அவளது பாட்டி...

- அங்கே
ஆழக் கடலடி - அவளுக்கு
ஆக்குமோர் காட்சியாய் - தந்தையின்
அரண்மனை உச்சியில் - வெள்ளிக்
கிரீடத்துப் பாட்டியின்........

பார்வையோ, கன்னி தாம்
பயணிக்கும் கப்பலின்
அடிப்புறம் மோதிடும்
அலையிலே நின்றது!

## அக்காள்மார்கள்!

- இதோ
மூத்தஅக் காள்களே! - தண்ணீர்
மேற்புறம் எழுகிறார்!!
வேதனை மிக்கராய் - தங்கள்
வெண்கரம் அசைக்கிறார்!!

- சின்னக்
கடற்கன்னி மகிழ்வுடன்
கரமதை அசைத்துத்தான்
களிப்புடன் இருப்பதை
கூறுமுன் அவ்விடம்...

## வெண்நுரை மட்டுமாய்...

- கப்பல்
சேவகன் வருகிறான்! - நீரில்
தமக்கையர் தாவிட! - தோன்றும்
வெண்மையாம் அது நுரை! - அதில்
வேலையாள் திருப்தியாய்...

## அயல் நாட்டிலே....

அந்தக் கப்பலும்
அடுத்தநாட் காலையில் - அண்டை
நாட்டரசன் தலை
நகர்த்துறை சேர்ந்தது!

- அங்கே
ஆலய மணிகள்
அனைத்துமே ஒலித்தன! - அந்த
உயர் கோபுரங்களில்
ஊதுகுழல் ஒலி!

வர்ணச் சீருடை
வசீகரம் சேர்த்திட
மரியாதை வணக்கமாய் - அணி
வகுப்பிலே இராணுவம்!

## கொண்டாட்ட நகர்!

நித்தம் ஒருவிழா - அந்த
நகரத்தில் நடந்தது.
நடன விருந்துகள்
நாளும் தொடர்ந்தன!

## இளவரசி தொலைவிலே...

அந்தநாட் டரசனின்
அன்புக் குமாரியோ
எங்கோ தொலைவுள்ள
தேவா லயத்திலாம்!

- "அவள்
அரச பண்புகள்
அனைத்துமே பயின்றிட - அங்கே
சென்றுள்ளாள்" என
சொல்லினர் அங்குளோர்!

## அதோ இளவரசி!

இறுதியில் வந்தனள்
இளவரசீ அவள்! - சின்னக்
கடற்கன்னிக்கு அவளையே
காணுமோர் ஆவலாம்......

- அங்கே
எழிலது மொத்தமாய்
ஒன்றே திரண்டதாய்! - அவளை
கண்டஎம் கடற் கன்னி - தன்றன்
கருத்தினை மாற்றல்போல்.....

இதுவரை பார்த்திடா
ஈடிலா எழில்நிலா
பளபளப் பானதாய்
பரிசுத்த மேனியாய்...

அடக்கம் பேசிடும்
அழகிய கண்களாய்! - அவை
கருநீ லத்திலே - நீள்
புருவம்பின் தோன்றலாய்...

## அவளே தான்!

"அவளா நீ?" என - எங்கள்
அரசகு மாரனோ
அதிசயத் தோடுதான்
அவளையே நோக்கினன்!

# உயிர் மீட்டவளா?

- அவன்

"குற்றுயிராய் நான் - அன்று
கடற்கரை கிடந்தேன்!
என்னுயிர் மீட்டனை" - என
ஆவலாய் மொழியவே....

நாணிச் சிவந்தஅந்
நங்கையை இளவல்தன்
மார்பினோடு அணைத்தனன் - "நான்
மகிழ்ச்சியோ டிருக்கிறேன்.

என்எதிர் பார்ப்புநீ!"
எனஅங்கு விழித்தனன்! - அங்கே
எம் கடற் கன்னியை - நோக்கி
ஆவலாய் மொழிந்தனன்!....

# எனக்காக கொண்டாடு!

- "அனைவரைவிட என்னில் - உயர்
அன்பினை வைத்துளாய்! - எந்தன்
இந்த மகிழ்ச்சியை - நீ
இங்கு கொண்டாடுவாய்..."

# உடைந்த உள்ளம்!

- சின்னக்
கடற்கன்னி அவனது
கரத்தினை கொஞ்சினள்! - அவள்
உள்ளமோ அக்கணம்
உடைந்துதான் போனது....

# இனி மரணமே!

அரசகு மாரனின்
அந்த ஓர் திருமணம்
நடந்திடும் வேளையே - கடல்
நங்கையின் மரணமாம்!

- அவள்
மீட்சியோ பெற்றிடாள்!
மரணந்தான் எய்தியே
மிதப்பளாம் நுரைஎன - கடல்
மேல் விதிஎன்பதாய்....

# திருமண வைபவம்!

- அவர்களின்
திருமண நாளைத்
தெருஎங்கும் சாற்றினர்!

அனைத்து ஆலயங்களில்
ஒலித்தன மணிகளே!

- அங்கே
இறை பலி பீடங்கள்
ஏற்றின தீபம்! - பெரும்
வெள்ளியாம் விளக்கிலே - நறு
மணம்தரு நெய்யிலே..

- தேவன்
ஆலய மதகுரு
அனைவரும் ஆட்டினர்
தூபக் கால்களை! - அந்த
திருமண சோடியோ..

## ஆசி!

ஒருவர் கரத்தினை
ஒருவர் பற்றினர்! - அந்த
தலைமை குருஇடும்
ஆசிகள் வாங்கினர்!

## தோழியாய்க் கடற்கன்னி!

அங்கே எங்களின்
இளங்கடற் கன்னிகை
பொன்னிறப் பட்டிலே
பூண்டனள் ஆடையை....

- அவள்
தாங்கினள் மணமகள்
தலைப்பு உடைத் தோழியாய்!.... அந்த
திருமண இன்னிசை! - அவள்
செவிகொள்ள மறுத்தது!

- அந்த
மங்கல நிகழ்விலே
மனம் அவள் பதித்திடாள் - அவள்
இறுதி நாள் இரவதும்
இழப்புமங்கு எழுவதாய்...

## கப்பலில் மணமக்கள்!

அந்த வைபவங்களோ
அனைத்துமே நிறைவுற
அன்றைய மாலையில்
அம் மண மக்களும்

கப்பலைச் சேர்ந்தனர்! - ஒலி
கடற் பீரங்கி யால்..
அத்தனை கொடிகளும்
அங்குதான் பறந்தது.

## அரச கூடாரம்!

அந்தக் கப்பலில்
அதிகம் செலவிலே
அரசகூடாரமே! - அதி
ஆடம்பரத்துடன்....

அழகிய இருக்கைகள்
அவ்விடம் பொலிவிடும்! - குளிர்
சுகந்தரும் அமைதியில் - மணமக்கள்
தூங்குதற்கு ஏற்றதாய்..

## கப்பல் புறப்பாடு!

கப்பல் பாய்அது
காற்றிலே புடைத்தது - இதம்
கொண்டதாய் கப்பலும்
கடலிலே ஊர்ந்தது.

# இரவு நடனம்!

இருளது சூழ்ந்திட - அங்கே
ஏற்றினர் வர்ணமாம்
விளக்குகள் ஒளியிலே - அங்கே
மகிழ்வுறு நடனமே!

கப்பல் ஓட்டிகள்
களிநடம் புரிவதாய்! - அன்று
கடலிலே இருந்து அவள்
கண்டதும் இதுவகை.........

# சின்னக் கடற்கன்னி ஆடினாள்!

- அவள்
முதல்முதல் கண்டதை
மனதிலே ஏற்றினள்! - அங்கே
அவளுமே ஆடினள்! - ஓர்
அற்புத நடனமே!

- ஒரு
வசந்தப் பறவையே - தெத்தி
மாறும் ஓர் காட்சியாய் - கன்னி
சுற்றிச் சுழல்நடம்
செய்தனள் அற்புதம்.....!

## ஆரவாரம்!

அவளது நடனத்தால்
அனைவரும் மயங்கினர்!
அவையே அதிர்ந்தது!
ஆரவா ரத்தினாதல்...

## இழப்பின் துயர்!

- அவள்
இதயம் துயரால்
அடித்தது வேகமாய் - கூர்மை
கத்தியே செருகலாய்
கால்களும் வலித்தன!

## மானுடக் காதல் தந்த இழப்பு...

அனைத்தையும் தாங்கியே
அவள் நடம் அமைந்தது!
தன் உறவினர்களை
தன் அரண் மனைதனை

தன்இன் குரல் தனை
துறந்துதன் காதலன்
ஒருவனுக்காகவே
அனைத்தையும் தாங்கினள்!

## இளவலோ புரிந்திடான்!

அவனைக் காண்பது
இந்தராத் திரிவரை
அரசகு மாரனோ - இவை
எதையுமே புரிந்திடான்....!

அவனது சுவாசமாம்
இதந்தரு காற்றதே
அவளதும் என்பதாய்
ஆகும் இக் கணம்வரை!

## இயற்கையில் இறுதிநாள்!

- அவள்
ஆழ்கடல், நீலவான்
அழகிய தாரகை - இவை
அனைத்தையும் பார்த்திடும்
இறுதியாம் நாளிது!

## ஆன்மா அழிவிலே!

"இனி எங்கு ஆன்மா?
இயலாது அதைப் பெற" - அவள்
நினைவுகள் ஓய்ந்தன! - அந்தக்
கனவுகள் கலைந்தன!

நள்ளிரவு ஏறியும் - அங்கு
நடனம் கேளிக்கைகளே
தொடர்ந்தன! அனைவரும்
சந்தோச உச்சியில்....

## மரணச் சிரிப்பு!

மரணம் என்பதை
மனதில் இருத்தியே - தன்றன்
சிரிப்பைச் சிந்தியே - கடல்
செல்வியும் ஆடினள்!

## மணமக்கள்!

அரச குமாரனும் - தன்றன்
எழில்மணப் பெண்ணிடம்
முத்தமே சிந்தினன்!- அவள்
மட்டிலா ஆவலாய்...

- அவன்
கருமுடிக் கற்றையை
கைகளால் அளைந்தனள்!
களிப்பின் உச்சியைக்
காட்டினர் இருவரும்...

# முதல் இரவுக்காய்!

- மணமக்கள்
கரங்களைக் கோர்த்தனர்
களிப்புடன் சென்றனர்! - எழில்
செய்யும் கூடாரத்தில்
சென்றே நுழைந்தனர்!

# அமைதியின் அவலம்!

திசைதனைத் திருப்பும்
சுக்கான் கருவிமுன்
நிற்பவன் மட்டுமே! - அங்கு
நிசப்தம் நிலவியது....

- சின்னக்
கடற்கன்னீஅவள் - மேல்
கப்பல் தளத்திலே - கீழ்
வானில் கதிரவன்
வரவையே தேடினள்!

- அதன்
முதற்கதிர் வந்ததும் - தன்
மரணம் என்றறிந்தவள்! - அதோ
மூத்தஅக் காள்மார்! - கடல்
மேல்அங்கு எழும்புகிறார்!

## மூத்தவர் பாசம்!

அவர்களின் முகமும் - எங்கள்
இளங்கடற் கன்னிபோல்
வெளிறிய முகமாய்
வேதனை சொன்னது!

- அவர்களின்
காற்றில் அலைந்திடும் - நீள்
கற்றைக் கூந்தலோ - அந்தக்
கவினை இழந்ததாய்
கத்தரித் திருந்தது!

## சூனியக் காரியின் கூலி!

"எங்கள் கூந்தலை
உனக்கென கொடுத்தோம் - இந்த
இராத்திரி முடிவிலே - நீ
இறக்காது இருந்திட...

## மீளும் மார்க்கம்!

சூனியக் காரியோ - எங்கள்
கூந்தலைப் பெற்றே - நீ
தப்பிடும் மார்க்கமாய் - இந்தக்
கத்தியைத் தந்தனள்!"

## கத்தியால் கொன்றிடு!

"இந்தக் கத்தியோ
எத்தனை கூர்மைபார்! - இதை
ஆதவன் உதிக்குமுன்
அரசகு மாரனினின்....

நெஞ்சிலே பாய்ச்சிடு! - அங்கு
நிறைந்திடும் வெப்பமாம்
குருதியை உந்தனின்
காலிலே கொட்டிடு!

- நீ
உப்புக் கடல்நுரை
ஆகுமுன் இப்பவே
வேகமாய்ச் செயல்படு
மீண்டிடும் மார்க்கமாய்....

## மீளவும் மீனின் வால்!

- சின்னக்,
கடற்கன்னி மீளநீ
காணுவை மீனின்வால் - நாங்கள்
களிப்புற, சோதரி! - எங்கள்
கடலடி சேருவாய்!

- அங்கே,
முந்நூ றாண்டுகள்
வாழலாம் எங்கள்போல்!
சூரியன் உதிக்குமுன் - இதைச்
சட்டெனச் செய்திடு!

## சொற்ப நேரமே!

அவனா, நீயா
இறப்பவர் யாரெனல் - இன்னும்
சொற்ப நேரமே - அதைச்
சாதகம் ஆக்கிடு!

## பாட்டியின் கூந்தலும்!

- எங்கள்
வயோதிபப் பேர்த்தியும்
வேதனை கொண்டுளாள்! - அவள்
எங்களைப் போலத்தன்
வெண்மையாம் கூந்தலை.....

- எங்கள்
செல்வம் உன் மீட்பிற்காய்
சூனியக் காரியின்
கத்தரிக் கோலுக்கு
கொடுத்துளாள்!, விரைவுகொள்!

## அரசகுமாரனைக் கொல்!

அரசகு மாரனை
இக்கணம் கொன்றிடு! - வானில்
செவ்ஒளி தோன்றுது
தெரியுதா! விரைந்திடு!

- இன்னும்
ஒருசில நாளிகை
ஆதவன் தோன்றிட!
அதன்பின் இறப்பாய்
எங்களின் சோதரி!"

## மூத்தோர் நீரிலே...

அக்காள் மார்களோ
அதிகம் கலக்கமாய்
துயரமாம் மூச்சுடன்
தண்ணீரில் மறைந்தனர்!

## சின்னக் கடற்கன்னி நெருங்கி..

சின்னக் கடற்கன்னி
சென்றே மணமக்கள்
உறங்கும் பகுதியின்
ஊதாத் திரைதனை.........

நீக்கியே பார்த்தனள்! - அங்கு
நித்திரைக் கோலத்தில் - எழில்
மணப்பெண் தலையணை - அவன்
மார்பென ஆக்கலாய்....

## இறுதி முத்தம்!

- சின்னக்
கடற்கன்னி நெருங்கினள் - தன்றன்
காதலன் நோக்கியே
குனிந்து அவன் புருவத்தைக்
கொஞ்சியே நின்றனள்!

## விடியல் வான்!

செந்நீலச் செறிவுவான்
செய்யும் பிரகாசமே! - அவள்
கரமது பற்றிய
கூரிய கத்தியில்......

பார்வையைப் பதித்தனள்! - மீண்டும்
அரச குமாரனில் - கண்கள்
நிலை குத்த நின்றனள்! - அங்கு
கனவுத் தூக்கமாய்.....

- காளை
வாய்முணுமுணுப் பது - அந்த
மணப்பெண் நாமமா?! - சின்னக்
கடற்கன்னி பற்றிய
கத்தியோ நடுங்கியது.

## கடலிலே எறிந்தாள்!

- கடற்
கன்னியோ கத்தியை
கடலலை மீதிலே
தூரமாய் வீசினள்! - அது
செம்பிர காசமாய்...

- ரத்தம்
பீறிட்டு எழுவதாய் - கடல்
பகுதியில் தோன்றியது - அவள்
செருகிய விழிசொல்லும்
சாவது நெருங்கலாய்..

## இறுதிப் பார்வை!

- மீண்டும்
அரசகு மாரனை - அந்த
இடுங்கிய கண்களால் - சின்னக்

கடற் கன்னி நோக்கினள் - சாவு
கிட்டும் அவ் வேளையில்....

## பாய்ந்து நுரையானாள்!

- அதோ
கடலிலே பாய்ந்தனள்!
கரைந்தவள் உருவமோ
நுரையென வருவதை - அந்த
நொடியினில் நோக்கினள்!

## புத்துயிர்ப்பு!

- இப்போ
கடலிருந் தெழுந்தனன் - காலைக்
கதிரவன், குளிர்தரு
கடல்நுரைக் காங்கே - தன்றன்
கதிர்களைப் பாய்ச்சினன்!

- அந்த
இதந்தரு உணர்வால் - கன்னி
இறப்பெனும் சிந்தையை
உணராநிலைபெற - பொங்கும்
பகலவன் பார்த்தனள்!

## அற்புத சிருஷ்டிகள்!

- அங்கே
ஒளியே உட்புகும்
ஒண்பொருள் வடிவிலே - மேலே
அவளைச் சூழ்ந்தனர்! - ஆகா
அற்புத சிருஷ்டிகள்!

- கன்னி
பார்வையில் நூறுஎன - அவர்கள்
பலபட விரிந்தனர்! - கப்பல்
வெண்ணிறப் பாயிலும் - சிவந்த
வானிலும் தெரிந்தனர்!

## கடற் கன்னியும் அற்புத சிருஷ்டியாய்...

- அந்த
சிருஷ்டிகள் போல்வதாய் - கன்னி
தோற்றம்அங்கு ஆனது! - நுரை
நீங்கலாய் உயர்வதாய் - கடல்
நங்கைஅங்கு உணர்ந்தனள்!

# காற்றின் புதல்விகளாக...

"இங்கிருந்து எங்குநாம்
ஏகிறோம்!" என்றஎம் - சின்னக்
கடற் கன்னி குரலதும் - தெய்வக்
களைஎன ஒலித்தது!

- "காற்றின்
செல்விகள் வாழிடம்
சேரவே!" என்பதாய்
ஓதிய அவர்களே
ஒண்பொருள் பேசினர்!

- 'ஒரு
கடற்கன்னீ அவள்
காலங்கள் கடந்துதாம்
நித்திய ஜீவனாய்
நிலைபெற வேண்டிடின்....

மானிடன் ஒருவனின்
மாசிலா அன்பிலே - அவள்
தோய்ந்திடல் வேண்டுமாம் - பின்னர்
தோன்றுமாம் பேறுஅது!

அடுத்தவர் தருபலம்!
ஆக்குமாம் அவளையும்
அழிந்திடா ஆன்மமாய்!.. - அங்கே
அவள்பெறாப் பேறுபோல்....

- காற்றின்,
செல்வியர்க்கும் இல்லையாம் - அந்த
சாவில்லா வாழ்வது! - ஆனால்
நற்பணி ஆற்றிடின் - அந்த
நிலைக்கு அவர் உயர்வராம்!'

- "நாங்கள்
வெப்ப நாடுகள்
மீதிலே வீசிடும்
கொடிய காற்றது
கொன்றிடா வகையிலே

- மனிதரை
பாது காக்கவே
பறந்தங்கு சேருவோம்! - அங்கே
குளிர்ந்த தென்றலாய்
குதூகலம் ஊட்டுவோம்!

மலர்செய் வாசனை - காற்று
மண்டலம் நிரப்புவோம்! - இந்த
புவியின் மாந்தரே
புத்துணர் வோடுதான்
நலன்கள் பெற்றிட
நீடுநாள் வாழ்ந்திட - நாங்கள்
வழங்கும் பணிகளாம் - இங்கே
முந்நூ றாண்டுகள்!

# அழியாத ஆன்மாக்கள்!

முடிவில் நாங்களும்
மனிதரே பெற்றிடும்
நித்ய ஜீவனாம்
நிலைஅதை எட்டுவோம்!"

- "உன்னை
எண்ணிடும் போதுநாம்
இரக்கமே கொள்கிறோம்!
எங்களுக்கு ஒப்பநீ
ஏற்றதை ஆற்றினை....

முழுமனதோடு உன்
முயற்சிகள் ஏற்றனை!
துன்பமே கண்டுஅதை
சகிப்புடன் தாங்கினை!

உந்தன் நன்மைகளே
உன்வரம் ஆனதே! - எம்போல்
முந்நூ றாண்டுகள்
முடிவிலே நீயுமே....

அழிந்திடா ஆன்மமாய்
ஆகுவாய் எங்கள்போல்!" - என்று
காற்றதன் செல்வியர்
கூறி அங்கு ஓய்ந்தனர்!

# முதல் கண்ணீர்!

- தன்றன்
பளிங்குக் கரங்களை - மேலே
பரிவுடன் தூக்கினள்! - விம்மி
கடவுளின் கதிரவன்
கருணையை நோக்கலாய்...

தன்றன் கண்களில்
திரண்டகண் ணீர்த்துளி! - அதை
முதன்முறை யாகவே! - கடல்
வனிதைஅங்கு உணர்ந்தனள்!

# கப்பலில் பரபரப்பு!

- அந்தப்
புலர்ந்த காலையில்
பரபரப்பு ஒலியதோ
கப்பல் பரப்பிலே
கேட்டவாறு இருந்தது!

- அங்கே
எங்கும் தேடினர்
எம்கடற் கன்னியை
இராச மைந்தனும் - அந்த
எழில் மணப் பெண்ணுமே!....

## கடலில் பாய்ந்திருப்பாளா?

- அவர்கள்
முத்தாய் ஒளிர்செயும் - கடல்
வெண்நுரை பார்த்தனர்! - அவள்
கடலில் குதித்ததாய் - எண்ணி
கவலையில் ஆழ்ந்தனர்!

## மணமகளுக்கு முத்தம்!

- கன்னி
அம்மணப் பெண்ணின்
அழகிய நெற்றியில்
அருவமாய் தந்தனள்!
அழகிய முத்தமே!

## அரகுமாரனை புன்சிரிப்புடன்!

- அந்த
அரசகு மாரனை
அங்குஅவள் பார்த்தனள்! - ஒரு
புன்னகை நோக்குடன் - இதோ
புறப்படும் நேரமே!

## பயணிப்பு!

- அவள்
காற்றின் செல்வியர்
கூடவே ஏறினள்!
சிவந்த ரோஜா
செய்திடும் வானிலே!

## முந்நூறு ஆண்டுகள்...

- ஒருத்தி,
"முந்நூ றாண்டுகள்
முடிவுற நாங்களும்
சுவர்க்க ராச்சியம்
சேரலாம்" என்றனள்!

## குறுகிய வழியிலும் விமோசனம்!

"அதிகம் தூரம் ஏன்?
அதற்குமுன் சேரலாம்" - இதை
காற்றின் ஒருமகள் - மெல்லக்
காதிலே ஓதினள்!

# நல்ல பிள்ளைகளால்...

"மனிதப் பிள்ளைகள்
வாழ்ந்திடும் மனைகள்மேல்
உருவம் அற்றநாம்
உலாவரும் போதிலே...

அங்கோர் பிள்ளையோ - தன்றன்
அன்னையைத் தந்தையை
களிப்பினில் ஆழ்த்திடும்
காரியம் செய்வதை...

கண்டிடும் எங்களின்
கண்கள்செய் விமோசனம்! - நாங்கள்
காக்கும் காலத்தில் - தெய்வம்
கழித்திடும் நாள்அவை!

# நூறு ஆண்டே கழியும்...!

- ஒரு
பிள்ளை எங்களைப்
பார்த்திடா வகையிலே - அதன்
அறைக்குள் பறந்து அதன்
ஆனந்தம் கண்டுநாம்....

புன்னகை பூத்திடும்
போது முந்நூறிலே - ஒரு
நூறு ஆண்டே - எமக்கு
நீங்கிடும்! வரம்என!"

## காத்திருக்கும் கொடுமை!

“எங்கள் கண்களில்
எதிர்ப்படும் பிள்ளையோ
வன்முறை பகை
வஞ்சினம் ஆனதாய்...

வளரும் கோலத்தை - நாங்கள்
வாங்கிடும் போதெலாம்
வருந்தக் கண்கள்எம்
வடிக்குமாம் நீர்த்துளி!


- அந்த
ஒவ்வோர் துளியதும் - மேலும்
ஓர் நாள் கூட்டுமே! - எங்கள்
கண்ணீர்த் துளிகளால் - காக்கும்
காலங்கள் நீளுமே!”

## எல்லோரும் வாழ்க!

*நித்திய ஜீவனில் - அந்த*
*நெஞ்சங்கள் சேருக! - என்றும்*
*நல்ல பிள்ளைகளால் - இந்த*
*ஞாலமே வாழிய!*

(கடற்கன்னி காவியம் முற்றும்)

# ஆசிரியரைப் பற்றி...



இந்நூலாசிரியர்
**கவிவேழம் பாரதிபாலன்**

இவர் எனது பால்ய நண்பர். குமாரசாமி ஜெயக்குமார் இவரது இயற்பெயர். 11.11.1953-ல் ஈழத்து நல்லூரில் பிறந்தவர்.

திருக்கோணமலை இவரது புகுந்த வீடு. டென்மார்க்கில் புலம் பெயர்ந்து வாழ்பவர்.

தமிழிலே சிறந்த பாண்டித்தியம் பெற்ற இவர் 16 வயதில் இருந்தே கவிபாடத் தொடங்கியவர்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர். வ.தெ. மாணிக்கனார் அவர்களால் 1990-ல் 'கவிவேழம்' என்று பாராட்டுப் பெற்றவர்.

இவர் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் அனைத்துலகத் உதவித் தலைவர்களில் ஒருவரும், இஸ்கன்டிநேவிய நாடுகளின் அமைப்பாளரும் ஆவார்.

93-ல் பேர்லினில் நடைபெற்ற பன்னாட்டுத் தமிழர் மாநாட்டிற்கு வருகை தந்து சிறப்பித்த முத்தமிழ்க் காவலர் அமரர் கி.ஆ.பெ. விசுவநாதம் ஐயா அவர்கள் இவரது புலமையை மெச்சி நல்லாசி வழங்கி இருக்கிறார்.

"கவிதைக் கனவுகள்" என்ற இவரது கவிதைத் தொகுதி 92-ல் ஈழத்தின் சாகித்தியப் பரிசை வென்றிருக்கிறது.

97-ல் கனடாவில் நடைபெற்ற 6-வது அனைத்துலக தமிழ் பண்பாட்டு இயக்க மாநாட்டில் "பைந்தமிழ்ப் பாவலர்" என்று பாராட்டுப் பெற்றவர்.

2001- டிசம்பரில் தென் ஆப்பரிக்கத் தமிழர் மாநாட்டில் ஆய்வுரை படித்து சென்னைப் பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் கோதண்டராமன் (பொற்கோ) அவர்கள் உட்பட பல உலக அறிஞர்களின் பாராட்டுப் பெற்றவர்.

கவிதைகளில் மாத்திரம் அல்லாது சிறந்த சிறுகதை எழுத்தாளர். தமிழிலே புதிய சுருதியை இணைக்கும் இவரது படைப்பாற்றல் பலரது பாராட்டுதலையும் பெற்றது.

19.01.2002-ல் எமது யாழ் செங்குந்த இந்துக் கல்லூரியின் அனைத்துலக பழைய மாணவர் சங்கத்தின் ஐக்கிய ராச்சியக்கிளை இவரது "அரைமனிதர்கள்" சிறுகதைத் தொகுதியை வெளியிட்டு வைத்து "பன்முக பாரதி" என்ற பட்டம் அளித்து பொன்னாடை போர்த்துக் கௌரவித்து இருக்கிறது.

அரிய கருத்துக்கள் கொண்ட இவரது ஆய்வுக் கட்டுரைகள் ஐரோப்பிய அறிஞர்களாலும் பாராட்டுப் பெற்று வருகின்றது. இவரது படைப்பு வரிசையிலே இப்போது வெளியாகி தொடர்ந்து வெளிவர இருக்கும் "உலக காவியங்கள்" தமிழ் உலகை நிச்சயம் அலங்கரிக்கும்.

டாக்டர். **செ. தேவேந்திரநாதன்**
கிங்ஸ்ரன் பல்கலைக் கழகம், இலண்டன்.